Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 27, 2021

செவ்வாய்க்கிழமை ஜூலை 27, 2021 | ஒளி: 07 கதிர்: 58 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## ‘30க்கு முன் பதிவதை தவறவிடாதீர்கள்’



நிதர்ஷன் வினோத்


புதிய வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கு இன்னும் இரண்டொரு தினங்களே இருக்கும் நிலையில், புதிய வாக்காளர்கள் இந்தக் காலக்கெடுவைத் தவற விட்டுவிடவேண்டாமென தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இலங்கை தேர்தல்கள் ஆணையம், புதிய வாக்காளர்களாகத் தகுதி பெற்றுள்ளவர்கள்,

தொடர்ச்சி P2

யாழ் மாவட்டச் செயலாளர் விவகாரம்

# ‘முடிவை பரிசீலனை செய்க’

### பிரதமருக்கு சம்பந்தன் கடிதம்



எனக்கு அறிவிக்கப்பட்ட வகையில் மிக விரைவில், யாழ். மாவட்டத்துக்கு தமிழ் பேச முடியாத ஒருவரை மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட இருக்கிறார். ஆகையால், அவ்வாறு முடிவு எடுக்கப்பட்டிருக்குமாயின், அம்முடிவை மீள் பரிசீலனை செய்யுமாறு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ‘மகளின் சடலத்தை தோண்டி எடுங்கள்’

### டயகம சிறுமியின் தாய் மன்றாட்டம்

என்னுடைய மகளின் மரணத்தில் ஏற்பட்ட சந்தேகம் இன்னுமே தீர்க்கப்படவில்லையென தெரிவித்த டயகம சிறுமியின் தாய் ரஞ்ஜனி, மகளின் சடலத்தைத் தோண்டியெடுத்து மீளவும் பரிசோதனை செய்யுமாறு மன்றாடினார்.

தொடர்ச்சி P2





## கொழும்பு காட்டாறு வெள்ளத்தில் உயரம் குறைந்த வாகனங்கள் நீந்தின

### மலையகத்தில் பனிமூட்டம்; பயணம் கவனம்

கொழும்பு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில், நேற்றுக்காலை முதல் மந்தமான வானிலையே நிலவியது. காலை வேளையில் கொழும்பில் பெய்த கடும் மழையால், தாழ்நிலப் பிரதேசங்கள் மட்டுமன்றி, சில வீதிகளும் வெள்ளக்காடாகின.

காலையில் 7 மணியளவில் பெய்வதற்கு ஆரம்பித்த மழை, சுமார் மூன்று மணிநேரத்துக்கு மேல், இடைவிடாது சோவென பெய்துகொண்டே இருந்தது. அவ்வப்போது காற்றின் வேகமும் அதிகரித்துக் காணப்பட்டது.

தொடர்ச்சி P2

## சவால்களை மலையக சமூகம் கூட்டிணைந்து சந்திக்க வேண்டும்



மலைய தமிழ்ச் சமூகம், இன்று சந்தித்திருக்கும் சவால்களை கூட்டிணைந்து சந்திக்கவேண்டுமெனத் தெரிவித்துள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி, நான்கு செயற்பாட்டார்கள் முக்கியமானவர்கள் என வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## டயகம சிறுமியின் சடலத்தை மீளத் தோண்ட நீதிமன்றம் அனுமதி

### ரிஷாட்டின் மனைவி உள்ளிட்ட நால்வருக்கு விளக்கமறியல்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் மனைவி உள்ளிட்ட நால்வரையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரான பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் கொழும்பு இல்லத்தில் பணிப் பெண்ணாக வேலை செய்தபோது, எரிகாயங்களுக்கு உள்ளாகி பின்னர் மரணமடைந்த தலவாக்கலை, டயகமவைச் சேர்ந்த 16 வயதான சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பில், அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். ரிஷாட் பதியுதீனின் மனைவி, மனைவியின் தந்தை, மனைவியின் சகோதரர், சிறுமியை வேலைக்கு சேர்த்த இடைத்தரகர் ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## மலையகத்தில் இடைவிலகிய மாணவர்களுக்கு வலை



டி.ஷங்கீதன்

மலையகப் பாடசாலைகளில் இடைவிலகிய மாணவர்கள் தொடர்பில் அறிக்கையை பெற்று, இடைவிலகிய மாணவர்களுக்கு என்ன நடந்திருக்கின்றது என்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சும், மாகாண கல்வி அமைச்சும் பொலிஸாரும் இணைந்தே நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்த அவர், இடைவிலகுகின்ற மாணவர்கள் தொடர்பாக எந்தவிதமான தகவல்களும் இல்லை.

தொடர்ச்சி P2

## 2021 சா/த பரீட்சை 2022க்கு மாற்றம்



2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மார்ச் மாதம் 3ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடத்துவதற்கு கல்வியமைச்சால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, “கல்விப் பொதுத் தராதர உயர்தரம் மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் ஆகிய பரீட்சைகள் ஏற்கெனவே குறிப்பிட்டதை போன்று,

தொடர்ச்சி P2

## ‘சேறுபூசும் பேச்சை செவிமடுக்கவே இல்லை’



சேறு பூசும் அமைச்சர்களின் விமர்சனங்களை, ஆசிரியர்களாகிய நாங்கள் ஒரு சதத்துக்கேனும் கணக்கெடுக்கவில்லை என தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், எமது தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர்வோம் என்றார்.

தொடர்ச்சி P2

## போலி கச்சேரி சிக்கியது

கிரிபத்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், அடையாள அட்டைகள் உள்ளிட்ட போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட இடமொன்று, பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, கிரிபத்கொடை, வேவெல்துவ பிரதேசத்தில் இந்தப் போலி கச்சேரி சுற்றிவளைக்கப்பட்டது, இதன்போது, ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சுற்றிவளைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஐந்து போலி அடையாள அட்டைகள், சாரதி அனுமதிப்பத்திரம், அச்சு இயந்திரமொன்று மற்றும் 90 காகிதத் தாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, முற்றுகை முன்னெடுக்கப்பட்ட இடத்தில் பல்வேறு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.



## ‘பபா’வுக்குப் பிணை



சேஹ்ன் செனவிரத்ன

‘பபா’ என அழைக்கப்படும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் நடிகையுமான உபெக்ஷா ஸ்வரணமாலி வாகன விபத்து ஒன்று தொடர்பில், கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தின் ஊடாக நேற்று (26) பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## மேலதிக நேர பேச்சு வெற்றியளித்தது

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிவடைந்துள்ளதாக என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் மற்றும் அமைப்பாளர்களுக்கு அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் மற்றும் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களால் இழைக்கப்படும் அநீதிகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

“இந்த நிலைமையை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்” என ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.



கலந்துரையாடல் குறித்து கருத்து தெரிவித்த சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப- தலைவர் மஹிந்த அமரவீர, தேர்தல் முறைமை திருத்தம், ஆசிரியர் சம்பள முரண்பாடுகள் மற்றும் உரம்

தொடர்ச்சி P2

## காணி அபகரிப்பை எதிர்த்து முசலி இளைஞர்கள் கவனயீர்ப்பு

எஸ்.றொசேரியன் லெம்பேட்

முசலி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தக் கோரி, அப்பகுதி இளைஞர்கள், நேற்று (26) காலை கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

வை.எப்.சி அமைப்பின் ஏற்பாட்டில் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் முசலி பிரதேச செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது. பூனாட்சிகுளம், பண்டாரவெளி போன்ற பகுதிகளில் உள்ள அரச காணிகள் தனியார் சிலரால் அடாத்தாகப் பிடிக்கப்படுவதகவும் இதனால் அப்பகுதி இளைஞர்களுக்கும் மக்களுக்கும், காணிகள் இல்லாத நிலை காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். எனவே, இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் விரைவில் அடையாளம் காணப்பட்டு, சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் கவனயீர்ப்பை முன்னெடுத்தனர்.

“காணிகளை விடுவித்து, காணியில்லாத ஏழை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கவும்”, “காணி அத்துமீறலை உடன் நிறுத்து”, “அடாத்தாக காணி பிடித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும்”, “பணம் படைத்தவர்கள் மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களே காணிகளை அபகரிக்கின்றனர்”

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘முடிவை பரிசீலனை செய்க’

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நீங்கள் அறிந்திருக்கின்ற பிரகாரம், யாழ் மாவட்டத்தில் 95 சதவீதமானவர்கள் தமிழ் பேசும் சமூகத்தினராவர். மேலும், 10 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய நிர்வாகத்தினை சேர்ந்தவர்களும் தமிழ் பேசும் சமூகத்தை சார்ந்தவர்களாவர் என்றும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் தமிழ் பேச தெரியாத ஓர் அரச உத்தியோகத்தரை மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபராக யாழ். மாவட்டத்துக்கு நியமிப்பது பொருத்தமற்ற ஒரு விடயமாகும். மேலும், இது ஜனநாயக விரோதமான செயலாகும் என்றும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்திலுள்ள உயர் பதவியில் இருக்கும் அரச உத்தியோகத்தர் தமிழ் பேசும் ஒருவராக இருக்கும் சந்தர்ப்பத்தில்தான் அவருடனான வாய்மூல மற்றும் எழுத்துமூல தொடர்பாடல்கள் பயனுள்ளதாக இருக்குமென தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள சம்பந்தன், எனவே, அத்தகைய பிரேரணையை மீளாய்வு செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

“தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான பூர்வீக இடங்களான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய அரசியலமைப்பின் ஊடாக அதியுச்ச அதிகார பகிர்வை வழங்க அரசாங்கம் முயற்சிகளை எடுக்கும் சந்தர்ப்பத்தில் இத்தகைய செயற்பாடுகள் எதிர்மறையான விளைவினையும் மக்களால் வரவேற்கப்பட முடியாத ஒன்றாகவுமே காணப்படுகின்றது” என்றும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, அத்தகைய பிரேரணையை மீளாய்வு செய்து, மேற்குறித்த விடயங்களை கருத்திக்கொண்டு, யாழ். மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபராக அனுபவமும் செயற்திறனுமுள்ள தமிழ் பேசும் ஓர் அரச அதிகாரியை நியமிக்குமாறும் அக்கடிதத்தின் ஊடாக கேட்டுக்கொண்டுள்ளார்.

# ‘30க்கு முன் பதிவதை தவறவிடாதீர்கள்’

தங்கள் பெயர்களைத் தேருநர் இடாப்பில் சேர்த்துக் கொள்வதற்கான பதிவுகளை, ஜூலை 30ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவேண்டுமென அறிவித்துள்ளது.

கொரோனாப் பேரிடர் காரணமாக அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று படிவங்களை விநியோகித்து வாக்காளர்களைப் பதிவு செய்யும் வழமையான நடைமுறை இந்த ஆண்டு நடைபெறாது என்றும் தகுதி பெற்ற வாக்காளர்கள், தாமாகவே கிராம சேவையாளரிடம் சென்று படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும் என்றும் அறிவித்துள்ளது.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பொதுச் செயலாளர் மகேசன் கஜேந்திரன் தெரிவித்துள்ளதாவது,

“வாக்குரிமை இலங்கைக் குடிமகனாகவுள்ள ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமையாகும். இலங்கையில் வாக்காளர் தினம் கொண்டாடப்பட்டுவரும் ஜூன் 01ஆம் திகதியன்று 18 வயது பூர்த்தியடைந்த இலங்கைக் குடிமகனாகவுள்ள எவரும் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள். தேருநர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்வதன் மூலம் மாத்திரமே இவ்வாக்குரிமை உறுதி செய்யப்படும்.

“ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலே பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடையும் போது தேர்வாகும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைவடையும்.

“வாக்களிக்கத் தகுதிபெற்ற அனைவரும் தங்களை வாக்காளராகப் பதிவு செய்தல் ஒரு தேசிய கடமையாகும். எனவே, இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக புதிய வாக்காளர்கள் அனைவரும் தமது பகுதிக் கிராமசேவையாளரிடம் சென்று தவறாது பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

# சவால்களை மலையக...

சமூக கூறுகளான அரசியல், சட்டத்துறை, சிவில் சமூக, தொழில் வர்த்தகத்துறை ஆகிய நான்கு செயற்பாட்டாளர்களே ஒன்றிணைய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ள அவர், ஒவ்வொரு கூறுகளும் தத்தமது பணியை கூட்டுப்பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

மலையக சட்டத்துறை மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் சந்திப்பு, கட்சி அலுவலகத்தில் நேற்று (26) இடம்பெற்றது. இதன்போதே, மனோ எம். பி மேற்கண்டவாறு வலியுறுத்தினார். முழு இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களும் வீட்டுப் பணியாளர்களும் அல்லர். தோட்டத்தொழிலாளர்களும் அல்லர். இப்படியான ஒரு கருத்தை ஒருசில இனவாதிகள் நிறுவ முயல்கிறார்கள். இது சூட்சுமம் நிறைந்த கருத்து. இது திட்டமிட்டு பரப்பப்படுகிறது என்று தெரிவித்த மனோ கணேசன் எம்.பி, முதலில் நாம் ஒன்றுகூடி இந்தக் கருத்தை முறியடிக்க வேண்டும் என்றார்.

“மலையக சமூகம் இன்று வளர்ந்து வருகிறது. அந்தச் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய ஒரு பிரிவினர்தான் இரண்டு இலட்சம் தோட்டத்தொழிலாளர்கள். இவர்களை கைத்தூக்கி விட வேண்டிய கடப்பாடு, மலையக அரசியல், சட்டத்துறை, சிவில் சமூக, தொழில் வர்த்தகதுறை செயற்பாட்டாளர்களுக்கு இருக்கின்றது” என்றார்.

# கொழும்பு காட்டாறு வெள்ளத்தில் உயரம் குறைந்த வாகனங்கள் நீந்தின

காற்றுடன் கலந்த மழையால், பஸ் தரிப்பிடங்களிலும், வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் மழையில் நனைத்துவிடாது ஒதுங்கியிருக்கக்கூடிய இடங்களிலும் ஓரமாய் ஒதுங்கிநின்றவர்களும் சாரலில் நனைந்துவிட்டனர்.

குடையின்றி வீட்டிலிருந்து வெளியேறி, இடைநடுவில் சிக்கிக்கொண்ட பலரும் முழுமையாக நனைந்துவிட்டனர். தாழ்நிலங்கள் மட்டுமன்றி மைதானங்கள் உள்ளிட்ட இன்னும் சில பிரதேசங்கள் குளம் போல காட்சியளித்தன.

வீதிகள் பலவற்றில் வெள்ளம் கரைப்புரண்டு ஓடியதால், பஸ், லொறி உள்ளிட்ட உயரம் கூடிய வாகனங்களைத் தவிர ஏனைய வாகனங்கள் தண்ணீரில் தத்தளித்து நீந்திச் செல்வதைப்போலவே பயணித்தன.

இதேவேளை, நீரேந்தும் பகுதிகளிலும் மழை கடுமையாக பெய்தமையால், சில ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்திருந்தது. மலையகத்தில் ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டன, பனிமூடத்தால் வாகனப் போக்குவரத்துக்கும் ஓரளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் கரையோரங்களில் கடுமையான காற்று வீசியது. காலி முதல் பொத்துவில் வரை மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை வழியாகவும், புத்தளம் முதல் மன்னார் வழியாக காங்கேசந்துறை வரையிலான கடல் பகுதிகளிலும் கடும் காற்றுவீசியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் சீரற்ற வானிலை, இன்னும் சில நாள்களுக்கு நீடிக்குமென வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் அவ்வப்போது இடியுடன் கூடிய மழை பெய்யுமென அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

# டயகமவின் சிறுமியின் சடலத்தை மீளத் தோண்ட நீதிமன்றம் அனுமதி

மேலும், புதைக்கப்பட்ட சிறுமியின் சடலத்தை தோண்டி எடுத்து புதிய சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையை பெற வேண்டுமென குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்வைத்த கோரிக்கைக்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

# ‘சேறுபூசும் பேச்சை செவிமடுக்கவே இல்லை’

என்றார். கொழும்பில் நேற்று (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ‘ஆசிரியர் கொரோனா கொத்தணி’ ஒன்று உருவாவதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், கடந்த காலங்களில் நாட்டில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லையா எனக் கேள்வி எழுப்பியதுடன், தொற்றை ஒழிக்கும் போர்வையில், போராட்டங்களை ஒடுக்கும் செயற்பாட்டையே இந்த அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

“எனவே, எந்தவொரு தரப்போ இதுவரை கொரோனாவால் போராட்டம் செய்ய வேண்டாம் என்று கூறவில்லை. ஆசிரியர்கள் பொறுப்புடன் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றியே போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்” என்றார்.

இந்த அரசாங்கம் கொரோனாவுக்கு மத்தியில்தான் சகல சட்டத்திட்டங்களையும் கொண்டு வருகின்றது எனத் தெரிவித்த அவர். சட்டமூலம் கொண்டு வரும் போது கொரோனா இல்லை. ஆனால், போராட்டம் செய்யும் போதுதான் கொரோனாவைக் காரணம் காட்டுகின்றனர் என்றார்.

# மலையகத்தில் இடைவிலகிய மாணவர்களுக்கு வலை

**இடை விலகியவர்களின் நிலைமை தொடர்பாக ஆராய வேண்டிய ஒரு நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. அண்மைய சம்பவத்தில், தரகர்களையும் ஏனையவர்களையும் மாத்திரம் குற்றம் சுமத்துவதால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாது**

அவ்வாறான அநேகமானவர்களே வீட்டு வேலைக்காக வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள் என்றார்.

நுவரெலியாவில் நேற்று (26) நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலிலேயே மேற்கண்ட கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. .

இந்த இடைவிலகியவர்களின் நிலைமை தொடர்பாக ஆராய வேண்டிய ஒரு நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. அண்மைய சம்பவத்தில், தரகர்களையும் ஏனையவர்களையும் மாத்திரம் குற்றம் சுமத்துவதால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாது என்றார்.

மேலும், இன்று 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வீடு வேலைகளுக்கு அமர்த்தப்படுகின்ற பொழுதிலும் அவர்களுடைய விவரங்கள் எங்கும் பதிவுக்கு உட்படுத்தப்படவில்லை. இவர்கள் தொடர்பாக ஆராய்வதற்கான எந்தவிதமான நடைமுறையும் இல்லை.

எனவே, எதிர்காலத்தில் வீட்டுப் பணிப்பெண்கள் தொடர்பாக முறையான தகவல்கல் திரட்டப்பட்டு, அவர்களுடைய நலன்கள் தொழில் செய்கின்ற இடத்தில் அவர்களுக்கான பாதுகாப்பு அவர்களுக்கான முறையான சம்பளம் உட்பட பல விடயங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிள்ளது என்றார்.

# 2021 சா/த பரீட்சை 2022க்கு மாற்றம்

**கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் இறுதி வாரத்தில் நடத்த ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. கொவிட் -19 வைரஸ் தாக்கம், பாடத்திட்டம் முழுமையடையாத காரணங்களால், அப்பரீட்சையை நடத்தும் திகதியில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலைகளைக் கட்டம் கட்டமாக திறக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன**

எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தப்படும்” என கல்வி அமைச்சரான பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்ட தகவலை அவர் கூறினார்.

“கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் இறுதி வாரத்தில் நடத்த ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. கொவிட் -19 வைரஸ் தாக்கம், பாடத்திட்டம் முழுமையடையாத காரணங்களால், அப்பரீட்சையை நடத்தும் திகதியில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது” என்றார்.

பாடசாலைகளைக் கட்டம் கட்டமாக திறக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களுக்கு முதற்கட்டமாக கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆசிரியர் மற்றும் அதிபர் சேவைகளில் ஏற்பட்டிருக்கும் சம்பள, கொடுப்பனவு பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த அவர், 24 வருட காலமாக நிலவும் இப்பிரச்சினையை பொறுமையாக கையாள வேண்டும். அப்பிரச்சினையை ஆராய ஐவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும் என்றார்.

# ‘மகளின் சடலத்தை தோண்டி எடுங்கள்’

**ரிஷாட் பதியுதீனின் வீட்டிலிருக்கும் சமையலறைக்குப் பின்புறத்தில், மின்சாரம் இல்லாத நாய் கூட்டை போன்றதோர் இடத்திலேயே எனது மகள் தங்க வைக்கப்பட்டிருந்தார். எனது மகளுக்கு என்னமோ நடந்துள்ளது. அவள் சாகவில்லை, கொன்றுவிட்டனர். ஆகையால், சடலத்தை மீண்டும் தோண்டியெடுத்து, மரண பரிசோதனை செய்யுங்கள் என மன்றாடினார். எனது மகளின் சவப்பெட்டியில் சத்தியம் செய்துள்ளதைப் போல, எனது மகளுக்கு நியாயம் கிடைக்கும் வரை, என் கண்களிலிருந்து ஒரு துளி கண்ணீரேனும் சிந்தாது என்றார்**

கொழும்புக்கு நேற்று (26) அழைத்துவரப்பட்ட சிறுமியின் பெற்றோர், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை செய்தனர். அதன்பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே, அத்தாய் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரிஷாட் பதியுதீனின் வீட்டிலிருக்கும் சமையலறைக்குப் பின்புறத்தில், மின்சாரம் இல்லாத நாய் கூட்டை போன்றதோர் இடத்திலேயே எனது மகள் தங்க வைக்கப்பட்டிருந்தார். எனது மகளுக்கு என்னமோ நடந்துள்ளது. அவள் சாகவில்லை, கொன்றுவிட்டனர். ஆகையால், சடலத்தை மீண்டும் தோண்டியெடுத்து, மரண பரிசோதனை செய்யுங்கள் என மன்றாடினார்.

“எனது மகளின் சவப்பெட்டியில் சத்தியம் செய்துள்ளதைப் போல, எனது மகளுக்கு நியாயம் கிடைக்கும் வரை, என் கண்களிலிருந்து ஒரு துளி கண்ணீரேனும் சிந்தாது” என்றார்.

மகளின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதுடன், மரண பரிசோதனை அறிக்கையிலும் எனக்கு சந்தேகமே எனத் தெரிவித்த அத்தாய், தன்னுடைய மகளின் சடலத்தைத் தோண்டியெடுத்து, மீளவும் மரண பரிசோதனை செய்யுமாறும் குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனையைப் பெற்றுக்கொடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

# ‘பபா’வுக்குப் பிணை

கண்டியிலிருந்து குருநாகல் நோக்கி உபெக்ஷா, நேற்று முன்தினம் (25) இரவு 11 மணியளவில் பயணித்துக்கொண்டிருந்த போது, அவரது கார் கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுகவெல பிரதேச செயலகத்துக்கு அருகில், எதிர்த்திசையில் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் மோதியுள்ளது.இந்த விபத்தில் 18 வயது இளைஞர் ஒருவர் காயமடைந்து பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து உபெக்ஷா கைதுசெய்யப்பட்டு, பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். அவரது கார், பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. உபெக்ஷா, கண்டி நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (26) ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போதே, அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில், கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி காமினி செனரத் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# காணி அபகரிப்பை எதிர்த்து முசலி இளைஞர்கள் கவனயீர்ப்பு

**கவனயீர்ப்பின் பின்னர் , கோரிக்கை அடங்கிய மகஜரை, முசலி பிரதேச செயலாளரிடம் இளைஞர்கள் கையளித்தனர்**

போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை, மேற்படி கவனயீர்ப்பில் கலந்துகொண்டிருந்த இளைஞர்கள் ஏந்தியிருந்தனர்.

கவனயீர்ப்பின் பின்னர் , கோரிக்கை அடங்கிய மகஜரை, முசலி பிரதேச செயலாளரிடம் இளைஞர்கள் கையளித்தனர்.

# மேலதிக நேர பேச்சு வெற்றியளித்தது

**ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலுக்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. என்றாலும், இரண்டரை மணி நேரத்துக்கும் மேலாக கலந்துரையாடல் நீடித்தது**

வழங்குவது போன்ற பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட்டது என்றார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலுக்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. என்றாலும், இரண்டரை மணி நேரத்துக்கும் மேலாக கலந்துரையாடல் நீடித்தது என்றார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியாம்பலாபிட்டிய, அமைச்சர்கள் நிமல் சிறிபாலா டி சில்வா, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்கள் தயாசிறி ஜெயசேகர மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தினர் மற்றும் ஜனாதிபதியின் பிரதான ஆலோசகர் லலித் வீரதுங்கவும் கலந்துகொண்டிருந்தார்.

# ஆசிரியர் கொத்தணிகள் உருவாகலாம்



சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை மீறும், ஆசிரியரின் போராட்டங்களால் நாட்டில் புதிய கொரோனா வைரஸ் கொத்தணிகள் உருவாகலாமென இராஜாங்க அமைச்சரும் பேராசிரியருமான சன்ன ஜயசுமன எச்சரித்துள்ளார்.

ஆபத்தான கொரோனா வைரஸ் வகையான டெல்டா வைரஸ் நாட்டில் மிக வேகமாகப் பரவிவரும் நிலையில், இதுபோன்ற போராட்டங்களை முன்னெடுக்க அனுமதியளிக்கக் கூடாது எனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

ஆசிரியர்களுக்கு இதுவரையில் முழுமையாக தடுப்பூசிகள் போடப்படவில்லை. எனவே ஆசிரியர்களிடமிருந்து கொரோனா வைரஸ் கொத்தணி உருவாகலாம் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர் என்றார்.

தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஆசிரியர்களுக்கு உரிமைகள் உள்ளது. இதன்படி ஆசிரியர்கள் போராட்டங்களை நாட்டில் முன்னெடுத்திருந்தனர். இவ்வாறானப் போராட்டங்களின் ஊடாகக் கொரோனா வைரஸ் ஆசிரியர்களிடையே பரவும் எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

> **தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஆசிரியர்களுக்கு உரிமைகள் உள்ளது. இதன்படி ஆசிரியர்கள் போராட்டங்களை நாட்டில் முன்னெடுத்திருந்தனர். இவ்வாறானப் போராட்டங்களின் ஊடாகக் கொரோனா வைரஸ் ஆசிரியர்களிடையே பரவும் ஆபத்துள்ளது**



டொலர் தொடர்பில்

## எவரும் குழப்பமடைய வேண்டாம்


நாட்டில் டொலர் தட்டுப்பாடுகள் இல்லை என நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ கூறியுள்ளதாக தெரிவிக்கும் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, எதிர்க்கட்சியினருக்கு டொலர் தொடர்பில் எதுவும் தெரியாது என்றார்.

ஆளுங்கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே நிதி அமைச்சர் பெசில் இதனைத் தெரிவித்ததாகவும், நாட்டில் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் காண்பிக்க முயற்சிப்பதாகவும், டொலர் தொடர்பில் நாட்டு மக்கள் குழப்பமடையத் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சருக்கே டொலர் பற்றி தெரியும். நாட்டில் டொலர் பற்றாக்குறையில்லை என நிதி அமைச்சரே கூறியுள்ளார். எதிர்க்கட்சிக்கு டொலர் தொடர்பில் எதுவும் தெரியாது. நாட்டில் டொலர் தட்டுப்பாடு இருப்பதாகக் கூறி அதிக விலைக்கு அவற்றை விற்பனை செய்ய முயற்சிக்கிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம்:

## குற்றவாளிகளுக்கு சஜித்திடம் இடமில்லை



சிறுவர் கடத்தல்கள், சிறுவர் தொழிலாளர்கள், சிறுவர்களை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்குபவர்களுடன் ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் பணியாற்றாதென அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், சிறுவர்களுக்கு எதிரான அனைத்துத் துன்புறுத்தல்களையும் ஐக்கிய மக்கள் சக்தி கண்டிக்கிறது என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தி தனியான கட்சி என்கிற போதிலும், ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாட் பதியூதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுடன் பாராளுமன்றத்தில் இணைந்து செயற்படுகிறது என்றார்.

மேலும், பல்வேறு கட்சிகளுடன் பல விடயங்கள் தொடர்பில் உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டு உள்ளதோடு, ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைகளுக்கு எதிராகச் செயற்படும் கட்சிகளுடன் இணைந்து பணியாற்றப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் உயிரிழந்த சிறுமி விவகாரத்தில், அந்த விடயம் நீதிமன்றில் நிரூபிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்கள், எவ்வாறான பதவிகளில் இருந்தாலும் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

## பலத்த காற்றில் சாய்ந்த கோபுரம்

எம்.ஏ.றமீஸ்

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் நேற்று (26) பிற்பகல் வேளை பலத்த காற்றுடனான மழை பெய்தமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்தது.

அத்துடன், பலத்த காற்று வீசியதால் அக்கரைப்பற்று அல்-பாத்திமிய்யா வித்தியாலயத்துக்கு அண்மையில் அமையப் பெற்ற தொலைத் தொடர்பு கோபுரம் முறிந்து வீழ்ந்துள்ளது.

இதனால், சில வீடுகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், மக்களின் உடமைகள் சிலவற்றுக்கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. வீடுகளில் இருந்த சிறுவர்கள், வயோதிபர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

மேலும், இப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த மின்கம்பங்கள், மின் இணைப்புகள் போன்றவற்றுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் சில மணி நேரம் மின்துண்டிப்பும் இடம்பெற்றிருந்தது.

மேற்படி தொலைத் தொடர்புக் கோபுரம், கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் இப்பகுதி மக்களின் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



## ரஞ்சனின் வீடு மனுஷவுக்கு



ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கராவுக்கு, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லம் கொடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் அவர் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் உத்தியோகபூர்வ இல்லத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

தற்போது பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார வீட்டைப் பொறுப்பேற்றுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, தனது விருந்தினராக தொடர்ந்து வீட்டில் தங்க அனுமதிக்கப்படுவார் என மனுஷ நாணயக்கார எம்.பி தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றும்

## சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

சிறுவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாவது அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த லேடி ரிச்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசுரிய, நாளாந்தம் 5 சிறுவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர் என்றார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர், இரு வாரங்களுக்கு முன்னர் நாளொன்றுக்கு சிறுவர் ஒருவரே தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், தற்போது இந்த எண்ணிக்கை 5 விட அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தாய்மார்களும் தொற்றுக்குள்ளாவது அதிகரித்துள்ளதோடு, நாளாந்த 8 - 10 வரையிலான தாய்மார்களும் சிறுவர்களும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள் என்றார்.

## கடலட்டைப் பண்ணைகள் கௌதாரிமுனையில் ஆரம்பம்

பூநகரி, கௌதாரிமுனையில் கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும் பணிகள் பிரதேச கடற்றொழிலாளர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுக்கு அமைய நக்டா நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட 16 இடங்களில் பண்ணைகளை அமைக்கும் பணிகள் முதற்கட்டமாக நேற்று (26) ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கான பயனாளர்கள் கௌதாரிமுனை கடற்றொழிலாளர் சங்கத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் பண்ணைகளை அமைப்பதற்குத் தேவையான வலைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு தொகுதி வலைகளும் நேற்று (26) வழங்கி வைக்கப்பட்டன.

பொருத்தமான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும் செயற்பாடுகள் வடக்கு மாகாணத்தில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

> **பூநகரி, கௌதாரிமுனையில் கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும் பணிகள் நக்டா நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட 16 இடங்களில் முதற்கட்டமாக நேற்று (26) ஆரம்பிக்கப்பட்டன**

## டெல்டாவைத் தடுப்பதே தற்போதைய தேவை



டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் காணப்படலாம் என தெரிவிக்கும் விசேட வைத்திய நிபுணர் வைத்திய ஹேமந்த ஹேரத், ஏனைய வைரஸ்களை விடவும் டெல்டா வேகமாகப் பரவுவதால், வைரஸ் பரவுவதைத் தடுப்பதே தற்போது அவசியம் என்றார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் டெல்டா வைரஸ் காணப்படலாம். டெல்டா தொற்றாளர்களிடமிருந்து ஏனையோருக்கு இந்த வைரஸ் பரவுவதைத் தடுக்கவில்லை என்றால், நாட்டில் பரவிய ஏனைய வைரஸ்களை விட வேகமாக இந்த வைரஸ் பரவும் என்றும் அவர் எச்சரித்தார்.

தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதையும், டெல்டா வைரஸ் வேகமாகப் பரவுவதைத் தடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே தற்போது அவசியம் என்றார்.

கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட மேல்மாகாணத்தில் டெல்டா தொற்றாளர்களின் எண்ணிக்கை 20 - 30 சதவீதமாகக் காணப்படலாம். ஏனைய மாவட்டங்களில் இதனைவிட குறைவான எண்ணிக்கையிலேயே டெல்டா தொற்றாளர்கள் காணப்படலாம். ஆனால் உறுதியாக அவர்களின் எண்ணிக்கையைக் கூற முடியாதுள்ளது என்றார்.

## ஐ.தே.க ஆட்சிபீடமேறும்

### செப்டெம்பரில் அறிவிப்பு'



ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சிப்பீடமேற்றுவதற்கான வேலைத் திட்டங்களை, அக்கட்சியின் 75ஆவது ஆண்டு விழாவின்போது தான் அறிவிக்க உள்ளதாக அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் இளைஞர் செயற்பாட்டாளர்களுடன் இணைய வழியிலான கலந்துரையாடலின்போது, பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர், ஐ.தே.கவின் 75ஆவது ஆண்டு விழா செப்டெம்பர் 06ஆம் திகதி நடைபெற உள்ளதோடு, அரசியலில் வெற்றி, தோல்வி சகஜமெனவும் தெரிவித்துள்ள ரணில், 1956ஆம் ஆண்டு ஐ.தே.கவுக்கு வெறும் 8 ஆசனங்களே கிடைத்திருந்த நிலையில், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்திலிருக்கும் எவருக்கும், நாடு தற்போது முகங்கொடுத்திருக்கும் நிலையிலிருந்து நாட்டை மீட்க முடியாதெனவும், கட்சியை முன்நோக்கிக் கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டங்களை அனைவருக்கும் அறிவிக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

> **அரசியலில் வெற்றி, தோல்வி சகஜம். 1956ஆம் ஆண்டு ஐ.தே.கவுக்கு வெறும் 8 ஆசனங்களே கிடைத்திருந்த நிலையில், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது**

தேவை

களுத்துறையில் உள்ள ரெஸ்ரூரண்டனுக்கு அனுபவம் வாய்ந்த, அனுபவம் இல்லாத உதவியாளர்கள் தேவை. உணவு, தங்குமிடம், சீருடை இலவசம். சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். சிமிலோ ரெஸ்ரூரண்ட் அன்டி பிரைவேட் (தனியார்) நிறுவனம். நாகொட, களுத்துறை. தொடர்புகளுக்கு 0777918350



அறிவித்தல்

சிலிம் பார்மசியுடிகல்ஸ் தனியார் நிறுவனத்தில் விற்பனை பிரதிநிதியாக சேவையாற்றிய தேசிய அடையாள அட்டை இலக்கம் 890931006V ஐக் கொண்ட மஹேஷ் இந்திக குமார என்பவர் 2021.07.16 ஆம் திகதி முதல் இந்த நிறுவனத்தில் சேவையில் இல்லை என்பதுடன் மேற் குறிப்பிட்ட திகதியில் இருந்து அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் எமது நிறுவனம் பொறுப்பு கூற மாட்டாது எனவும் இதன் மூலம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# பாசிக்குடாவுக்கு செல்லத் தடை

## ஏமாற்றத்துடன் திரும்பும் சுற்றுலாப் பயணிகள்

எச்.எம்.எம்.பர்ஸான்

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்த இடமான பாசிக்குடா கடற்கரைக்கு, உள்ளூர், வெளியூர் சுற்றுலாப் பயணிகள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காரணமாகவே பாசிக்குடா கடற்கரைக்கு சுற்றுலாப் பயணிகள் செல்வதைத் தற்காலிகமாகத் தடை விதித்துள்ளதாக பாசிக்குடா சுற்றுலா பொலிஸ் காவலரண் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடற்கரைப் பகுதிக்குள் எவரும் செல்லாத வகையில் தடைபோட்டு பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, பாசிக்குடா கடற்கரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டோ – கார் விபத்தில் ஆசிரியை பாமதி மரணம்

## கணவன், மகன் படுகாயம்

அ.அச்சுதன், தீஷான் அஹமட், எப். முபாரக்





திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் சேருநுவர பகுதியில் நேற்று முன்தினம் (25) இடம்பெற்ற வாகன விபத்தொன்றில், திருகோணமலை, பாலையூற்று சென்லூட்ஸ் வித்தியாலய ஆசிரியை திருமதி பாமதி ஞானவேல் (வயது 49) மரணமடைந்துள்ளார்.

அத்துடன், அவரது கணவரும் 7 வயதான மகனும் படுகாயமடைந்த நிலையில், கணவர் மூதூர் வைத்தியசாலையிலும், மகன் திருகோணமலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



# ஐஸ் போதைப்பொருள் வர்த்தகர் கைது

எம்.எஸ்.எம்.நூர்தீன், எல். ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடியில் ஐஸ் போதைப்பொருள் விற்பனை செய்து வந்த போதைப்பொருள் வர்த்தகர் ஒருவர், நேற்று (26) கைது செய்யப்பட்டுள்ளார் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து 86 கிராம் ஐஸ் போதைப்பொருளையும் அலைபேசியும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.



## தீர்த்தோற்சவம்...

வரலாற்றுச் சிறப்புமிக்க உகந்தைமலை ஶ்ரீ முருகன் கோவிலின் வருடாந்த ஆடிவேல் தீர்த்தோற்சவம், நேற்று முன்தினம் (25) நடைபெற்றது. கோவில் பிரதமகுரு சிவஶ்ரீ சீதாராம் குருக்கள் தலைமையிலான குருக்கள் பங்கேற்புடன், குறைந்தளவிலான பக்தர்களுடன் கடற்கரையில் தீர்த்தமாடினர்.
(படப்பிடிப்பு: வி.ரி. சகாதேவராஜா)

மக்களுக்காக சேவையாற்றுபவர்களுக்கு

# மொழி தடையில்லை

என்.ராஜ், எம்.றொசாந்த்

மக்களுக்கு கடமையாற்றும் போது, மொழி ஒரு பிரச்சினையான விடயமல்லவென, வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துசேன தெரிவித்தார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளராக, நேற்று (26) தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், “நான் வவுனியாவில் கடந்த ஒன்றரை வருடங்களாக மாவட்டச் செயலாளராகக் கடமையாற்றியிருந்தேன். வவுனியாவைப் பொறுத்தவரை தமிழ், சிங்கள இனங்களைச் சேர்ந்த அனைத்து மதங்களையும் உள்ளடக்கிய மக்கள் வசித்து வருகின்றார்கள். எனவே, நான் ஒரு பெரும்பான்மை இனத்தவராக இருந்தாலும், தமிழ்ப் பிரதேசத்தில் கடமையாற்றுவதில் எந்தவித இடையூறும் இருக்காது எனக் கருதுகின்றேன்” எனவும் அவர் தெரிவித்தார்.









## பதவியேற்பு...

வடக்கு மாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன, நேற்று (26) காலை 11:40 மணிக்கு, கைதடியில் உள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் வைத்து, தனது கடமைகளை பொறுப்பெற்றுக் கொண்டார். (படப்பிடிப்பு: எம். றொசாந்த், என்.ராஜ்)

டயகம சிறுமிக்கு நீதி கோரி

# வவுனியாவிலும் ஆர்ப்பாட்டம்

க. அகரன்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீன் வீட்டில் பணிப் பெண்ணாக பணியாற்றிய நிலையில் மரணமடைந்த சிறுமிக்கு நீதி கோரி, வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்னால், நேற்று (26) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்றப் பெண்கள் ஒன்றியம், சிவில் சமூக அமைப்பின் ஏற்பாட்டில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், தற்போது சிறுமிகள், பெண்கள் மீதான துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், பெண்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவது கேள்விக்குறியாகவுள்ளது என்றனர்.

மன்னார் மாவட்டத்தில்

# 52, 144 பேர் தடுப்பூசி செலுத்தினர்

எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 46 ஆயிரத்து 440 பேருக்கு, பைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டு உள்ளதாக, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

நேற்று (26) காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், மன்னார் மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஓரளவு நிறைவடைந்துள்ளன. இதில் 46 ஆயிரத்து 440 பேர் பைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுக் கொண்டுள்ளனர். 550 பேருக்கு 2ஆவது டோஸ் வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம், கல்வியல் கல்லூரி மாணவர்கள் 666 பேருக்கு பைசர் தடுப்பூசி முதலாவது கட்டம் வழங்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

நித்திரைக்குச் சென்ற

# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

பாறுக் ஷிஹான், ஏ.எல்.எம்.ஷினாஸ்



அம்பாறை, கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு, தோம்புதோர் வீதியிலுள்ள வீடொன்றில், மர்மமான முறையில் உயிரிழந்த குடும்பஸ்தர் ஒருவரின் சடலம், நேற்று (26) காலை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 45 வயதுடைய தர்மராசா திருச்செல்வம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நபரின் மனைவி, குவைத் நாட்டில் 8 வருடங்களாகத் தொழில்புரிந்து வருவதுடன், 9ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மகள், உறவினர் வீட்டில் வசித்து வருவதுடன், குடும்பஸ்தர் தனியாகவே வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு நித்திரைக்குச் சென்றவர், மறுநாள் காலை இவ்வாறு உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

பொத்துவில்

# பாக்கியவத்தை முடக்கம் நீங்கியது

எம்.எஸ்.எம். ஹனிபா




கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பொத்துவில் பிரதேசத்தில் முடக்கப்பட்டிருந்த பாக்கியத்தை P-13 கிராம சேவையாளர் பிரிவு, நேற்று (26) காலை 06 மணியுடன் தளர்த்தப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

பிரதேச செயலக

# ஊழியருக்கு கொரோனா

சுப்பிரமணியம் பாஸ்கரன், எம். றொசாந்த்



கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலக ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், செயலகத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த கண்டாவளை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவர், எழுமாற்றான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து, பிரதேச செயலகச் செயற்பாடுகள், நேற்று (26) இடைநிறுத்தப்பட்டு, அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

மதுபோதையில் அட்டகாசம்:

# பெண் உட்பட நால்வர் காயம்

க. அகரன்

வவுனியா, ஈச்சங்குளம் பகுதியில், நேற்று முன்தினம் (25) மாலை, மதுபோதையில் சென்றவர்கள் நடத்திய தாக்குதலில், பெண் உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர்.

குறித்த பகுதியில் மதுபோதையில் நின்றிருந்த ஐந்து பேர் கொண்ட இளைஞர் குழுவினர், அப்பகுதியில் நின்ற பொதுமக்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

# பயிர்ச்செய்கைக்கான ஆரம்ப கூட்டம்



மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கடுக்காமுனை வில்லு குளத்து நீரைப் பயன்படுத்தி, இடைப்போக பயிர்ச்செய்கையை மேற்கொள்வது தொடர்பான ஆரம்ப கூட்டம், கடுக்காமுனை பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கடுக்காமுனை குளத்து நீரைப் பயன்படுத்தி இடைப்போக பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு கடுக்காமுனை, பண்டாரியாவெளி, படையாண்டவெளி, படையாண்டகுளம் ஆகிய 4 கண்டங்களுக்கு எத்தனை ஏக்கர் நிலப்பரப்பு தேவை என்பதை விவசாயிகளிடம் இருந்து முன்மொழிவுகளைப் பெற்று நிலப்பரப்புகளை 4 கண்டங்களுக்கும் வழங்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

# 244 கிலோ கிராம் கேரளா கஞ்சாவுடன் மூவர் கைது

எஸ்.நிதர்ஷன், எம்.றொசாந்த்



வடமராட்சி கடற்பரப்பில் வைத்து, 244 கிலோ கிராம் கேரளா கஞ்சாவுடன், மூவர், நேற்று (26) அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவை, இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு படகில் கடத்தி வரப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள், வளலாயைச் சேர்ந்த 22, 30, 36 ஆகிய வயதுடையவர்கள் ஆவர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரும் காங்கேசன்துறை கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக, கடற்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்ப வறுமையால் பாடசாலைகளிலிருந்து

# இடைவிலகுவோருக்கு இலவச தொழிற்பயிற்சி



- கண்டி, பதுளையில் தொழிற்பயிற்சி நிலையங்கள்;
- இராஜாங்க அமைச்சர் ஜீவன் உறுதுணை



டி.சந்ரு

குடும்ப வறுமை காரணமாக பாடசாலைகளில் இருந்து இடைநடுவே விலகும் மாணவர்கள், ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் ஊடாக தொழில்சார் கற்கைநெறிகளை இலவசமாகக் கற்று, தொழில் வாய்ப்புகளையும் சுயதொழில்களையும் மேற்கொள்ள முடியும் என, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், ஹட்டனில் அமையப்பெற்றுள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் போன்று கண்டி, பதுளை ஆகிய பிரதேசங்களிலும் தொழிற்பயிற்சி நிலையங்களை அமைப்பதற்காகத் தனது அமைச்சின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் , நேற்று (26) கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், வலப்பனை, கொத்மலை, ஹங்குராகெத்த ஆகிய பிரதேசங்களிலும் சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக, பல்வேறு விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, கடந்த அரசாங்கத்தால் கட்டப்பட்ட வீடமைப்புத் திட்டங்களில் காணப்படும் உட்கட்டமைப்பு வசதி குறைபாடுகளை நிவர்த்தி செய்து, ஓகஸ்ட் 30ஆம் திகதிக்கு முன்பதாக மக்களிடம் கையளிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மலையக சிறார்களை

# கூலி வேலைக்கு அமர்த்துவதை தடுத்தல்

## தீர்மானம் நிறைவேற்றம்

மலையக சிறார்கள் கூலி வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தடுத்து, அவர்களுக்கான கல்வி உரிமையை உறுதிப்படுத்தி, வளமானதோர் எதிர்காலத்துக்கு அடித்தளமிடுவது குறித்து தற்போது கவனம் செலுத்தப்படுகின்றது.

இதற்காக தேசிய பொறிமுறையை உருவாக்கி, அதனை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு, கண்டியில் நேற்று (26) நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பேராசிரியர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற அமைப்புகளின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

**“ மலையக சிறார்கள் கூலி வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தடுத்து, அவர்களுக்கான கல்வி உரிமையை உறுதிப்படுத்தி, வளமானதோர் எதிர்காலத்துக்கு அடித்தளமிடுவது குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது**

அரசியல் பிரமுகர்கள், பாதுகாப்புத் தரப்பு, அரச சார்பற்ற பிரதிநிதிகள், பெண்கள், சிறார்களுக்காகக் குரல் எழுப்பும் தேசிய அமைப்புகளின் பிரதிநிதிகள், சர்வதேச மட்டத்திலான பிரதிநிதிகள், புத்திஜீவிகள் ஆகியோரின் உதவியுடன் இத்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த வேண்டும் என இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், நகர, தோட்டப்புற இளைஞர்கள் வலயமைப்பையும் இதில் உள்வாங்க வேண்டும் எனவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ரூபாய் ஆயிரத்துக்காக

# கொழுந்தின் நிறையை அதிகரிக்க முடியாது



எஸ். சதீஸ்.எம். கிருஸ்ணா

1000 ரூபாய் நாள் சம்பளத்துக்காக தொழிலாளர்கள் 20 கிலோ கிராம் தேயிலை கொழுந்து பறிக்க வேண்டும் என்ற மஸ்கெலியா கம்பனியின் நிர்ப்பந்தத்தை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த, தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன், தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் தொழிலாளர் தேசிய சங்கம் தொடர்ந்து போராடும் என்றார்.

மஸ்கெலியாவில் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**“ மஸ்கெலியா பிரதேச தோட்டத் தொழிலாளர்கள் தமது நாளாந்த சம்பளத்துக்காக இதுவரை காலமும் 18 கிலோ கிராம் தேயிலைக் கொழுந்தைப் பறித்து வந்தனர். ஆனால், 1,000 ரூபாய் சம்பள அதிகரிப்பு அறிவிக்கப்பட்ட நாள் முதல், மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு உட்பட்ட தோட்ட நிர்வாகங்கள், தொழிலாளர்களிடம் 20 கிலோ கிராம் கொழுந்து பறித்தால் மாத்திரமே ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படும் என்று நிர்பந்தித்து வருகின்றன.இந்த நிர்ப்பந்தத்தை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது**

தொடர்ந்து தெரிவித்த அவர், மஸ்கெலியா பிரதேச தோட்டத் தொழிலாளர்கள் தமது நாளாந்த சம்பளத்துக்காக இதுவரை காலமும் 18 கிலோ கிராம் தேயிலைக் கொழுந்தைப் பறித்து வந்தனர்.

ஆனால், 1,000 ரூபாய் சம்பள அதிகரிப்பு அறிவிக்கப்பட்ட நாள் முதல், மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு உட்பட்ட தோட்ட நிர்வாகங்கள், தொழிலாளர்களிடம் 20 கிலோ கிராம் கொழுந்து பறித்தால் மாத்திரமே ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படும் என்று நிர்பந்தித்து வருகின்றன. இந்த நிர்ப்பந்தத்தை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.







# புனருத்தாபனம்...

பதுளை, வேவஸ்ஸ பெருந்தோட்டத்தின் மத்திய பிரிவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில், புனருத்தாபன நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் வரவேற்கப்படுவதையும் பூஜையில் கலந்துகொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.
(படப்பிடிப்பு: எம். செல்வராஜா)

கறகல தொல்லியல் தளத்துக்கு

# புதிய பஸ் சேவை

ஏ.ஏ.எம்.பாயிஸ்

பலாங்கொடை, கூறகல தொல்லியல் பகுதிக்குப் புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கூறகல விகாரைக்கு வரும் யாத்திரிகர்களின் நலன்கருதி இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இவ்விகாரையின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, பலாங்கொடை இ. போ.ச.டிப்போவின் இப்புதிய பஸ் சேவை, கூறகல பௌத்த விகாரைப் பிரதேசத்தில் இருந்து பலாங்கொடை வழியாக பெல்மதுளை-இரத்தினபுரிக்கும் அதன் பின் மீண்டும் இந்த பஸ் சேவை, இரத்தினபுரியில் இருந்து கூறகல வரையிலும் இடம்பெறவுள்ளது.

# நீதி கோரல் தொடர்கின்றது...

ஆ.ரமேஸ் , எம். கிருஸ்ணா



டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி, மலையகத்தின் பல இடங்களில் நேற்றும் (26) ஆர்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய, வலப்பனை பிரதேச சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றிணைந்த ஆர்பாட்டங்கள் ஒன்றை நேற்று (26) காலை இராகலை நகரில் முன்னெடுத்திருந்தனர்.

அத்துடன், லிந்துலை-என்போல்ட் தோட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் லிந்துலை என்போல்ட் பிரதேச அமைப்பாளர் ரமேஸ் தலைமையிலும் என்போல்ட் தோட்டத்தில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்க ப்பட்டிருந்தது.

சர்வாதிகாரத்தை ஒழிக்க

# பேதமின்றி ஒன்றிணையவும்

ஆ.ரமேஸ்

பெருந்தோட்ட நிர்வாகங்களின் அடாவடித்தனத்தையும் சர்வாதிகாரப் போக்கையும் ஒழிப்பதற்கு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் தொழிற்சங்க அரசியல் பேதங்களை மறந்து ஒன்றிணைய வேண்டுமென, இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் சுப்பையா சதாசிவம் கேட்டுக்கொண்டார்.

தொழிற்சங்க போராட்டத்தில் அனைவரும் ஒன்றிணைந்து களம் இறங்கும் பட்சத்திலேயே தொழிலாளர்கள் ஒற்றுமையை வெளிக்காட்டி, அதன்மூலம் உரிமைகளைப் பெற்றெடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

தோட்ட கமிட்டித் தலைவர்கள், அமைப்பாளர்கள் கலந்து கொண்ட நேற்றைய (26) கூட்டத்திலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தோட்டங்களில் தற்பொழுது சந்தாப் பணம் பிடிக்காததால், தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள் தோட்ட நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லும் பொழுது, தோட்டத்தில் தொழிற்சங்க சந்தா பிடிப்பதில்லை. உங்களை தொழிற்சங்கத் தலைவர்களாக ஏற்றுக்கொள்ள முடியாதெனக் கூறி பேச்சுவார்த்தை நடத்தாது புறக்கணிக்கின்றனர்.

அந்தவகையில் தோட்டங்களில் தொழிற்சங்கங்களை செயலிழக்க தோட்ட நிர்வாகம் திட்டமிட்டுச் செயற்படுகின்றது என்றார்.

# தீர்வு கிட்டும் வரை போராட்டம் தொடரும்

மெய்யன், மொஹமட் ஆஷிக்




அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்தை அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க நினைப்பதைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்த மலையக ஆசிரியர் முன்னணியின் மத்திய மாகாண தலைவர் எஸ். மகேந்திரன், தீர்வு கிட்டும் வரை தமது போராட்டம் தொடரும் என்றார்.

நாம் புதிதாக சம்பள அதிகரிப்பைக் கேட்டுப் போராடவில்லை. ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தைக் கேட்டும் இலவசக் கல்வியை இல்லாதொழிக்கும் கொத்தலாவல பல்கலைக்கழக சட்ட மூலத்தை மீளப்பெற வேண்டும் எனக் கோரியுமே எமது போராட்டத்தை தொடர்கின்றோம் என்றார்.

மலையக ஆசிரியர் முன்னணி, கண்டி, திகனயில் நேற்று முன்தினம் (25) ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை, இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட செயலாளர் எஸ். முரளி கருத்துத் தெரிவிக்கையில், உதவி ஆசிரியர்களாகப் பணி புரிபவர்கள் பல ஆண்டுகளாகியும் குறைந்த கொடுப்பனவையே பெறுகிறார்கள். பலரின் நியமனங்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. அதிக பணத்தைக் கொடுத்து பட்டப்படிப்பை மேற்கொள்ளவும் சான்றிதழ்களைப் பெறவும் வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படவுள்ளது. எதிர்கால சமூகம் குறித்த போராட்டமே இது. இதற்கு எதிர்கால நலன்கருதி சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

# மக்களின் கரங்களில் கொழுவியிருக்கும் சாவிகள்

அவசர ஓட்டத்தின் போது, ஒருசில வினாடிகளுக்கு மட்டுமே பச்சை சமிக்ஞை விளக்கு ஒளிரும் சந்தியில் சிக்கிக்கொள்ளும் வாகன சாரதியொருவர், தனக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருக்கும் வாகனச் சாரதியை மனதால் திட்டிக்கொண்டுதான் இருப்பார்.

அவ்வாறுதான், நீண்ட வரிசையில் சிக்கிக்கொள்ளும் சாரதிகளும், தங்களுக்கு முன்பாக நிற்கும் வாகனத்தின் சாரதியை திட்டிக்கொண்டிருப்பர்.

அவசரப்பட்டுப் பயணிக்க வேண்டியோர், அந்தச் சமிக்ஞையைக் கடக்கும் வரையிலும் பதற்றத்துடனேயே இருப்பர். அவ்வாறுதான், நாடு முழுமையாக எப்போது திறக்கப்படும் என்பது தெரியாமல் பலரும் பதற்றமான நிலையிலேயே இருக்கின்றனர். எத்தனை நாள்களுக்குத்தான் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடப்பது என, பலரும் முணுமுணுத்துக் கொண்டிருப்பர்.

இந்தமுறை வீட்டுக்கு வந்து, எங்கேயாவது கூட்டிக்கொண்டு போகவேண்டும் என்று அன்புக் கட்டளைகளை இடுவர். ஆனால், கொரோனாவின் தாக்கமும் டெல்டா பிறழ்வின் பரவலும், சற்றேனும் குறையவில்லை என்பதை ஞாபகத்தில் கொள்ளவே வேண்டும். ஒன்றல்ல, இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றிக்கொண்டுவிட்டோம் என இறுமாப்புக் கொண்டவர்கள் பலர், சுகாதார வழிகாட்டல்களை மீறி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

“எவ்வளவு நேரம்தான் முகக்கவசத்தை அணிந்திருப்பது, மூக்கு அரிக்கிறது” எனக்கூறிவிட்டு, பொதுவெளியில் கழற்றிக்கொண்டு இருப்போரும் உளர். மூக்கு அரிக்கிறதென முகக்கவசத்தை கழற்றிக்கொண்டால், மிக இலகுவாக கொரோனா வைரஸ் நுழைந்துவிடும்.

இதற்கிடையில், எதிர்வரும் செப்டெம்பர் மாத இறுதிக்குள் 30 வயதுக்கு கீழ்பட்ட சகலருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுவிடும். அதற்குப்பின்னரே நாடு முழுமையாகத் திறக்கப்படுமென அமைச்சர் பந்துல குணவர்தன ஆருடம் கூறியிருக்கின்றார்.

ஆனால், யாரென்ன சொன்னாலும் நாங்கள் தடுப்பூசியை செலுத்திக்கொள்ளப் போவதில்லை என்ற திமிர்த்தனத்துடன் இன்னும் சிலர் அலைந்துகொண்டுதான் இருக்கின்றனர்.

30 வயதுக்கு மேற்பட்டும், தடுப்பூசியை செலுத்திக்கொள்ளாதவர்களுக்கு எதிராக ஏதாவது நடவடிக்கையை எடுப்பதற்கு சட்டரீதியில் அரசாங்கம் ஆராயவேண்டும். இல்லையேல், அவ்வாறானவர்கள் மிக இலாவகமாக வைரஸை பரப்பிவிடுவர்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் ஆகக்குறைந்த சலுகையை பெற்றுக் கொள்வதற்கேனும் கொரோனா தடுப்பூசி அட்டையை சான்றுப்படுத்தவேண்டும் என்றால்கூட, தடுப்பூசி செலுத்தும் பணிகள் வெற்றியளிக்கும்.

இல்லையேல், எவ்வளவுதான் தடுப்பூசிகளைச் செலுத்தினாலும், தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைக்கவும் முடியாது. கொரோனா தொற்று மரணங்களை கட்டுப்படுத்தவும் முடியாது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

நாடும் முழுமையாகத் திறக்கப்படுமா, இல்லையா? என்பதெல்லாம் ஒவ்வொருடைய கரங்களிலேயே இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, நாட்டைத் திறக்கும் சாவியே, தங்களின் கைகளில் இருப்பதாக எண்ணிச் செயற்பட்டால், வைரஸை துடைத்தெறிவது வெகு தொலைவில் இருக்காது.

ஒவ்வொரு துறையும் இயங்கவேண்டும். இல்லையேல், முடக்கத்திலிருந்து மீண்டெழுந்து, சாதாரண நிலைமைக்குள் திரும்புதல் கடும் சிரமமான காரியங்களில் ஒன்றாகிவிடும் என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

காலம் கைமாறி போகும். செல்வந்தர்களின் பரம்பரை அதே நிலையில் தொடர்ந்தும் இருப்பது அரிது. அரசியல் தலைமைகள், பதவி மாறியபடியே இருக்கிறது.

கல்வியில் சமநிலைத் தன்மை ஏற்பட்டதால் வருமானம் குறைந்தவர்களின் பிள்ளைகளும் உயர் நிலைக்கு வரமுடியும். இன்ப, துன்ப நிலை மாறுவது போல வையகத்தின் மாற்றங்கள் பாகுபாடின்றி சுழற்சி முறையில் நடைபெற்றபடியே நடந்தேறும்.

அநேகமான மனிதர்களின் வாழ்வின் எழுச்சிகளை துன்பியல் அனுபவங்களே ஏற்படுத்துகின்றன. எனினும், இந்த விடயங்களை சோம்பேறிகள் உணர்வதேயில்லை.

மூளையை உயிர்பிக்காமல் அநேகர் உறங்கியபடியே இருக்கின்றனர். இரும்பு உபகரணங்களை உபயோகிக்காமல் விட்டால் அது துருப்பிடித்துவிடும். எந்த அழகான பொருளையும் மெருகேற்றினால்தான் அது ஜொலிக்கும். கருமங்கள் ஒருவரை உருவாக்குகின்றன.

பருத்தியூர் பால– வயிரவநாதன்

‘ஹிசாலினி’களுக்கு

# வழி சொல்லவும் வேண்டும்

மொஹமட் பாதுஷா

கடந்த சில மாதங்களாக, “பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுக்கு நீதி கிடைக்க வேண்டும்” என்று ஒலித்து வந்த குரல்கள், அவரது வீட்டில் பணிபுரிந்த சிறுமி உயிரிழந்ததை அடுத்து, சிறுமிக்கு நீதி கோரும் போராட்டங்களாகத் திசை திரும்பி இருக்கின்றன.

ஹிசாலினிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற அழுத்தங்கள், வேறு ஒரு விசாரணைக்காக தடுப்புக்காவலில் உள்ள ரிஷாட் பதியுதீனுக்கு, மேலும் சிக்கல் நிலையை தோற்றுவிக்கும். இது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் அவர் மீதான அனுதாபமும் அபிமானமும் இப்போது வேறொரு பரிமாணத்தை எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

ரிஷாட், ஹிசாலினி ஆகிய இருவருக்கும் இருவேறு விவகாரங்களில் நீதி கோரப்படுகிறது. அந்தவகையில், இவ்விரு விடயம் வெவ்வேறாக நோக்கப்பட வேண்டும்.

மலையகத்தைச் சேர்ந்த ஹிசாலினிக்கு, நீதி கிடைக்க வேண்டும் என்பது, இனம், மதம் தாண்டிய பொதுவான நிலைப்பாடாகும். ரிஷாட்டின் வீட்டில், ஹிசாலினிக்கு களங்கம் இழைக்கப்பட்டிருந்தால், அதற்குக் காரணமானவர்கள் யார் என்றாலும் தண்டிக்கப்பட வேண்டும். அதுபோல, ரிஷாட்டின் வீட்டுக்கு வருவதற்கு முன்னர், அவர் சிறுமியாக இருந்த காலத்தில், அவருக்கு நடந்த பாலியல் அத்துமீறல்கள் பற்றியும் விசாரித்து தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இதில் மாற்றுக் கருத்துகள் யாருக்கும் இருக்க முடியாது. ஆனால், ஹிசாலினிக்கு நீதி கிடைத்தால் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எல்லாப் பெண்களுக்கும், நீதி கிடைத்து விடுமா? எல்லா ‘ஹிசாலினி’களுக்கும் வாழ வழி பிறந்து விடுமா என்று, சிந்திக்க வேண்டியுள்ளது.

அத்துடன், இந்த வழக்கில் குற்றவாளி தண்டிக்கப்பட்டால் மாத்திரம், சிறுமிகள் வேலைக்குச் செல்வதும், அந்த இடங்களில் தகாத முறையில் கன்னிகழிவதும், பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாவதும் முடிவுக்கு வந்து விடுமா? இதுபோன்ற தற்கொலைகளை நிறுத்தி விடலாமா, என்ற கேள்விகளுக்கும் விடை தேட வேண்டியிருக்கின்றது.

இலங்கையில் மிக அதிகமாக வஞ்சிக்கப்பட்ட ஒரு மக்கள் சமூகம் இருக்கின்றது என்றால் அது மலையக சமூகம்தான். இவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள். இந்த மக்களை வைத்து அரசியல் செய்கின்ற அரசியல்வாதிகள், இன்று போராட்டம் நடத்துகின்ற தரப்பினர், இந்த மக்களின் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருப்பார்களாக இருந்தால், இந்நிலைமை ஏற்பட்டிருக்காது.

யார் என்ன சொன்னாலும், மலையகத்தில் சிறுமிகளும் இளவயது பெண்களும் வேலைக்குச் செல்வதும் தலைநகர் போன்ற இடங்களில் பணிப்பெண்களாகத் தொழில்புரிவதும் தொடர்ச்சியாக நடந்து கொண்டுதான் இருக்கின்றது. நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள வறிய பெண் பிள்ளைகளும் இவ்விதம் வேறு இடங்களுக்குச் சென்று தொழில் செய்கின்றனர்.

இவ்வாறான தருணங்களில், கணிசமான பணியிடங்களில் பாலியல் வன்புணர்வு, பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன. அநேகர் இதை விருப்பமில்லாமல் சகித்துக் கொள்கின்றனர்.

வீட்டுப் பணிப் பெண்ணாகப் பணிபுரிகின்ற வீடுகளில் மட்டுமல்ல, பெரிய நிறுவனங்கள், பல்தேசியக் கம்பனிகள் போன்றவற்றிலும் ஏதோ ஒரு வகையில் பாலியல் சுரண்டல் இருந்து கொண்டுதான் இருக்கின்றது. தொழில் போய்விடும் என்பதற்காக, அவர்கள் அதைப் பொறுத்துக் கொண்டுதான் காலத்தைக் கடத்துகின்றார்கள். இவர்களை வஞ்சிக்கும் ‘கோட்-சூட்’ போட்ட காமுகர்கள், சட்டத்தின் பிடிக்குள் அகப்படுவதே இல்லை.

ஏன், ஆயுதம் தரித்தோரால் வல்லுறவு புரியப்பட்ட பிள்ளைபற்றி, தனது சொந்தப் பிள்ளையையே கர்ப்பிணியாக்கிய காமுக தந்தை பற்றி நாம் கேள்விப்படவில்லையா? பாலியல் துஷ்பிரயோகத்துக்கு முயன்ற ஆசிரியர் பற்றியும் மதகுரு பற்றியும் கேள்விப்பட்டதே இல்லையா?

ஆகவே, ஹிசாலினிக்கு முன்னரும் இது போன்ற சம்பவங்கள் நடந்தன. அவரது மரணத்துக்குப் பின்னரும், கடந்த வாரத்தில் மட்டும் பல சம்பங்கள் பதிவாகியுள்ளன.

எனவே, இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதும் அது விடயத்தில் நீதி நிலைநாட்டாமல் விடப்படுவதும் பிறர் வீடுகளில், தொழிலிடங்களில் மட்டுமல்ல சொந்தக்கார வீடுகளில் கூட நடக்கின்றது. அதேபோல், றிசானா நபீக் போன்று வெளிநாடுகளில் நீதி மறுக்கப்பட்ட பெண்களின் கதைகளும் ஏராளம் உள்ளன.

ஆனால், இன்று பழிசொல்கின்ற ஊரும் உலகமும், அந்தப் பெண்களுக்கும் குடும்பத்தினருக்கும் வழிசொல்ல என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

சிறுமிகள் வேலைக்குச் செல்லாமல் தடுக்கும் விதத்தில், பொருளாதாரத் திட்டங்களை வகுக்க அரசியல் தலைவர்கள் என்ன செய்தார்கள்? காமுகன்களுக்கு பாடம்புகட்ட ஒரு சமூகமாக நாம் என்ன செய்திருக்கின்றோம்? சொல்லப் போனால் எதுவுமே செய்யவில்லை.

அப்படியென்றால், ‘றிஸானா’க்கள், ‘ஹிசாலினி’களுக்கு ஏற்பட்ட நிலைமைகளுக்கு நாமும் ஏதோ ஒருவகையில் குற்றவாளிகள்; காரணகர்த்தாக்கள் என்றுதான் கருத வேண்டியிருக்கின்றது.

டயகமவைச் சேர்ந்த ஹிசாலினி என்பவர், சிறுமியாக இருக்கும்போது ரிஷாட் பதியுதீன் எம்.பியின் வீட்டில் பணிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது. பின்னர் அவர், 16 வயதை அடைந்த பின்னரே, குறித்த இடத்துக்கு வேலைக்கு வந்திருப்பதாக வீட்டுரிமையாளர்கள் சாட்சியம் கூறியுள்ளனர். இவ்வாறிருக்க, அவர் கடுமையான தீக்காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஹிசாலினி தீயில் அலறுவதைப் பார்த்து, கால்துடைப்பானால் தீயை கட்டுப்படுத்தி, நீர்த்தொட்டியில் அமிழ்த்தியதாக ரிஷாட் குடும்பத்தினர் கூறியுள்ளனர்.

மரணத் தறுவாயில் இருந்த ஹிசாலினி, தனக்குத்தானே தீயிட்டுக் கொண்டதாக வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும் ஆயினும் அதற்கான காரணத்தை கூறவில்லை என்றும் கூறப்படுகின்றது. அத்துடன், ரிஷாட் எம்.பியின் வீட்டுக்கு வருவதற்குப் பல வருடங்களுக்கு முன்னரே, அவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாகவும் ஒரு தகவல் வெளிவந்துள்ளது.

எனவே, இந்தத் தகவல்கள் எல்லாம் உண்மையாக இருக்கும் பட்சத்தில், ரிஷாட் பதியுதீன் குடும்பத்தினர் மீது சுட்டுவிரல் நீட்டுவதற்கான வாய்ப்புகள் ஆரம்பத்தில் குறைவாக இருந்தன. ஆயினும், ஹிசாலினியை தும்புத்தடியால் தாக்கிய விடயம், அதுபற்றி வீட்டுத் தலைவியிடம் அவரது தாய் உரையாடிய விடயம், அத்துடன் எம்.பியின் மைத்துனர் வேறு ஒரு பெண்ணை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டு என்பவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது, குறிப்பிட்ட வீட்டில் இந்த மரணத்துக்கு உடனடிக் காரணம் ஏதோ இருக்கலாம் என்பதான சந்தேகம் ஏற்பட்டது.

இந்த வேளையில், அரசியல்வாதிகளும் சமூக செயற்பாட்டாளர்களும் அமைப்புகளும் ஹிசாலினிக்கு நீதி வேண்டி போராட்டம் நடத்தின. இதையடுத்து ரிஷாட் குடும்பத்தினர் மூவர் உள்ளடங்கலாகப் பலர் கைது செய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். பல பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொள்கின்றன; பல சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளப் போவதாக அரசாங்கம் கூறி வருகின்றது.

இதுபோல பல சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. நீதிக்கான கோசங்களும் ஒலிக்கின்றன. இப்போது, ஓர் அரசியல்வாதியின் வீட்டில், ஹிசாலினி தீயில் எரிந்து இறந்தமையால் இந்த விவகாரம் இந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகின்றது.

எது எவ்வாறாயினும், இந்த யுவதிக்கு நீதி கிடைக்க வேண்டும். ரிஷாட் பதியுதீன் வீட்டில், ஹிசாலினிக்கு அக்கிரமம் நடந்திருந்தாலும் அதற்கு முன்னர் அவரது பெண்மை சிதைக்கப்பட்டிருந்தாலும் எல்லோரும் தண்டிக்கப்பட வேண்டும். இது விடயத்தில், சித்த சுவாதீனமுள்ள யாரும் வேறு ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியாது.

ஆனால், வேறு சில விடயங்களையும் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. அதாவது, ரிஷாட் பதியுதீன் தடுப்புக்காவலில் இருக்கின்றார். அவர் தனக்கான நீதியையே பெற்றுக் கொள்ளப்படாதபாடுபடுகின்றார். இந்நிலையில், ரிஷாட்டை இறுக்குவதற்கு அரசாங்கம் முனைகின்ற சூழலில், ஹிசாலினி வழக்கில் ரிஷாட் குடும்பத்துக்கு சார்பாக விசாரணைகள் செல்வதற்கான எந்த வாய்ப்புகளும் இல்லை.

அதேவேளை, ரிஷாட்டுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று போராடிய தமிழ் அரசியல்வாதிகள், ஹிசாலினிக்காகக் குரல்கொடுப்பது எந்த விதத்திலும் தவறில்லை. அதனை முஸ்லிம்கள் வேறு கண்ணோட்டத்தில் நோக்கினாலும், தமிழ் அரசியல்வாதிகளைப் பொறுத்தமட்டில் அதற்குள் ஒரு சமூகப் பொறுப்பும் அரசியலும் இருக்கின்றது.

அத்துடன், வஞ்சிக்கப்படுவோருக்காக குரல்கொடுப்பதற்கான அவசியம் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் சமூக இயக்கங்களுக்கும் இருக்கின்றது. நீதிக்கு மதமும் இனமும் ஒரு தடையில்லை.

ஆனால், ஹிசாலினிக்கு நீதிகோரும் போராட்டங்கள், ரிஷாட்டையும் தமிழ் தலைவர்களையும் தூரப்படுத்தவும் முஸ்லிம்களையும் மலையக தமிழர்களையும் துருவப்படுத்துவதற்கான எத்தனங்களாக அமைந்து விடக் கூடாது.

மாறாக, எல்லா ‘ஹிசாலினி’களுக்குமான பரந்த முன்னெடுப்பாக அமைய வேண்டும். டயகம ஹிசாலினிக்கு மட்டுமன்றி, இதுபோல வீடுகளில், நிறுவனங்களில், குடும்பத்தில் வேலை செய்யும் பாதிக்கப்பட்ட அனைத்துப் பெண் பிள்ளைகளுக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

நீதி நிலைநாட்டுவதோடும், ஆர்ப்பாட்டம் நடத்தி கோஷம் எழுப்புவதோடும் இவ்விடயத்தை மறந்து விடாது. இவ்வாறு சிறுவர்கள், இளவயது பெண் பிள்ளைகள் வாழ்வதற்கும் வழிகாட்ட வேண்டும். இல்லாவிட்டால் இது தொடர்கதையாகவே இருக்கும்.

## கடிதங்கள்

### உப அலுவலகம் அமைக்கவும்

கிண்ணியா பிரதேசத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உப அலுவலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு, நீர்ப்பாசன அமைச்சரிடம் கிண்ணியா ஷூரா சபையால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்தில் சிறிய நீர்ப்பாசன குளங்கள் அதிக அளவில் காணப்பட்ட போதிலும், நீர்ப்பாசன திணைக்களத்தின் உப அலுவலகமொன்று இந்தப் பிரதேசத்தில் இல்லாமை ஒரு குறைபாடாக இருப்பதாகவும் கிண்ணியா ஷூரா சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் கோரிக்கையை சாதகமான முறையில் பரிசீலனை செய்யுமாறு, நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

நீர்ப்பாசனத்தை மேம்படுத்தி, விவசாயத்துறையையும் அது சார்ந்த ஏனைய தொழில்களையும் வலுவூட்டி, தேசிய ரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் மக்கள் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கோடு, இந்த நீர்ப்பாசன திணைக்களத்தின் அலுவலகம் இங்கு அமைக்கப்பட வேண்டும் எனவும் கிண்ணியா ஷூரா சபை கோரிக்கை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

– ஏ.எம்.ஏ.பரீட்



புதுடெல்லி

வேளாண் சட்டங்களை எதிர்த்து

# டிராக்டரில் சென்றார் ராகுல்

மத்திய அரசாங்கம் இயற்றிய 3 வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விவசாயிகள் பிரச்சினையில் தீர்வு காணவும் வலியுறுத்தி காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி, நேற்று (26) டிராக்டர் செலுத்தி பாராளுமன்றத்துக்குச் சென்றார்.

விவசாயிகள் நடத்திவரும் போராட்டத்துக்குத் தீர்வு காண, விவசாயிகளுக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் இடையே 12 சுற்றுகள் பேச்சுவார்த்தை நடத்தியும் தோல்வியில் முடிந்தது. இந்நிலையில், வயநாடு எம்.பியும், காங்கிரஸ் முன்னாள் தலைவருமான ராகுல் காந்தி, நேற்று டிராக்டரில் பாராளுமன்றத்துக்கு வந்தார். விவசாயிகளுக்கு ஆதரவாகவும் விவசாயிகள் போராட்டத்துக்கு தீர்வு காணவும் வலியுறுத்தியுமே ராகுல் காந்தி இவ்வாறு டிராக்டரில் பாராளுமன்றம் வந்திருந்தார்.




இதன்போது, ராகுல் காந்தி ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில், “நான், விவசாயிகளின் சார்பில், அவர்களின் கருத்துகளை பாராளுமன்றத்துக்குத் தாங்கி வந்துள்ளேன். விவசாயிகளின் குரல்களை, மத்திய அரசாங்கம் நசுக்குகிறது பாராளுமன்றத்தில் விவசாயிகளின் பிரச்சினை பற்றி எந்த விவாதமும் நடக்கவில்லை. வேளாண் சட்டங்கள் என்ற போர்வையில் இருக்கும் கறுப்புச் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும்” எனத் தெரிவித்தார்.

கூடலூர்

## மனிதனுக்கு இல்லாதது யானையிடம்...

சேற்றில் சிக்கி, உயிரிழந்த குட்டி யானையை, வனத்துறையினர் நெருங்கவிடாமல், இரண்டாவது நாளாகவும் தாய் யானை பாசப் போராட்டம் நடத்தி வரும் சம்பவம், கூடலூரில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகேயுள்ள செம்பாலை பகுதியில் ஒரு பள்ளத் தாக்கின் சேற்றில் சிக்கி, குட்டி யானையொன்று, இரண்டு தினங்களுக்கு முன்பு, இறந்து காணப்பட்டது.

தகவல் அறிந்து வனத்துறையினர் அங்கு சென்றபோது, இறந்த குட்டியின் அருகே தாய் யானையும் மற்றொரு யானையும் நின்றிருந்தன.



பட்டாசு வெடித்தும் சப்தம் எழுப்பியும் யானைகளை விரட்ட முயற்சி செய்தனர். ஆனால், குட்டி யானைக்கு அருகில் வனத்துறையினர் செல்லாதவாறு இரண்டு காட்டு யானைகளும் தடுத்தன. நீண்ட நேரம் முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை.

வனத்துறையினர் குட்டி யானையை மீட்டு பிரேத பரிசோதனை செய்ய முயன்றனர். ஆனால், தாய் யானை அந்த இடத்திலிருந்து நகராமல் பாசப்போராட்டம் நடத்தி வருவது நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

செங்கல்பட்டு

## பெண்ணின் கெட்டிக்கார செயல்

செங்கல்பட்டு மருத்துவமனையில் பாலியல் தொந்தரவு கொடுத்த கட்டட ஒப்பந்தக்காரர் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.


இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: தனது குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாததால், செங்கல்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்துள்ளார் தாய்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (25) காலை குழந்தைகள் நலப்பிரிவு வார்ட் கழிப்பறைக்குச் சென்றபோது, அங்கு கட்டடப் பணிகளைக் கவனித்து வந்த ஒப்பந்தக்காரர், தாயிடமிருந்து கைக்குழந்தையை பறித்து வைத்துக் கொண்டு, தனக்கு இணங்கவில்லை எனில் குழந்தையைக் கொலை செய்து விடுவதாக மிரட்டியுள்ளார். அந்த பெண் ஒப்பந்தக்காரரைத் தாக்கிவிட்டு, குழந்தையை மீட்டு அங்கிருந்து ஓடிவந்துள்ளார்.

புதுடெல்லி

## இந்திய பாராளுமன்றத்தில் இப்படியுமா?

தேசிய ஜனநாயக கூட்டணியின் தலைவராக, மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய் இருந்தார். அப்போது பாராளுமன்றத்தில் அவருக்கு அறையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பாராளுமன்றத்தில் 50க்கும் மேலான அறைகள் காணப்பட்டன.



அதில் மிகவும் பெரியது வாஜ்பாய்க்கு ஒதுக்கப்பட்ட அறையாகும். வாஜ்பாய்க்குப் பின் அத்வானி எம்.பியாக இருந்த போது, இந்த அறையை உபயோகித்தார். வாஜ்பாயின் அறை என மிகவும் மரியாதையாக சொல்லப்பட்ட இதை, பாரதிய ஜனதா தேசிய தலைவர் நட்டாவுக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி, நட்டா மீது எந்த அளவுக்கு நம்பிக்கை வைத்துள்ளார் என்பதற்கு இது சான்று என்கின்றனர் பா.ஜ.க மூத்த தலைவர்கள்.

விருதுநகர்

## ஆத்திரக்காரிக்கு புத்தி மட்டு

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி கிராமத்தில் இரண்டு குழந்தைகளுடன் தாய் கிணற்றில் குதித்தார். இந்தச் சம்பவத்தில் இரண்டு குழந்தைகளும் பலியாக, தாய் உயிர் பிழைத்தார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: காரியாப்பட்டியில் வசிக்கும் புஷ்பவனம் என்பவருக்கு இரண்டு மனைவிகள். இரண்டாவது மனைவிக்கு இரண்டு குழந்தைகள் இருந்தனர். இரண்டாவது மனைவிக்கும் கணவருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்படுவது வழக்கம். நேற்றுமுன்தினம் (25) இரண்டாவது மனைவியை தாக்கியுள்ளார் கணவன். இதன்போது ஆத்திரமடைந்த இரண்டாவது மனைவி அவர் தமராக்கியிலுள்ள தாய் வீட்டுக்கு இரு குழந்தைகளுடன் பஸ்ஸில் சென்றுள்ளார். இடைவழியில் பஸ்ஸை இடையில் நிறுத்தி இறங்கியுள்ளார்.

ஆத்திரம் தலைக்கேறிய நிலையில் இருந்த அவர், அங்கிருந்த கிணற்றில் இரண்டு குழந்தைகளுடன் குதித்தார். இரண்டு குழந்தைகளும் நீரில் மூழ்கி மரணமடைந்தன.

இதன்போது, மோட்டார் கயிற்றைப் பிடித்து, இரண்டாவது மனைவி உயிர் தப்பினார். தகவல் கிடைத்தவுடன் சென்று, தீயணைப்பு வீரர்கள் குழந்தைகளின் உடல்களை மீட்டனர்.

புதுடெல்லி

செந்தமிழ் விருதுகள் வழங்கவில்லை

## மோடி கோபப்பட்டார்

தமிழ் அறிஞர்களுக்கு செந்தமிழ் விருதுகள், மத்திய அரசாங்கம் சார்பில் வழங்கப்படும் என 2015ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஆனால், ஆறு ஆண்டுகளாகியும் இந்த விருதுகள் யாருக்கும் வழங்கப்படவில்லை. யாருக்கு இந்த விருதுகளை வழங்க வேண்டும் என்பதை முடிவு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்த விடயம் தெரிந்ததும் மிகவும் கோபப்பட்டாராம் மோடி. “ஏன் இதுவரை எதுவும் நடக்கவில்லை” எனக் கேள்வி கேட்டுள்ளார். எனவே, ஆறு ஆண்டுகளுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக விரைவில் இந்த விருதுகள் வழங்கப்படும் என சொல்லப்படுகிறது.



சென்னை

## விவசாயிகள் திருடர்களா? அண்ணாமலை கண்டனம்

கம்பம் பள்ளத்தாக்கு, முல்லை பெரியாறு பகுதி விவசாயிகளை திருடர்கள் என, விமர்சித்த தமிழக நிதியமைச்சருக்கு, மாநில பா.ஜ.க தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார்.

மாநில பா.ஜ.க தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

முல்லை பெரியாறு ஆற்று பகுதி விவசாயிகள், ஆற்றில் இருந்து வாய்க்கால் வாயிலாக நீர் பாய்ச்சுகின்றனர். இதனால், ஆற்று நீரைத் திருடுவதாக மின்சார இணைப்பை அதிகாரிகள் துண்டித்துள்ளனர். மதுரையில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில், ஆற்று நீரை பாய்ச்சும் விவசாயிகளை திருடர்கள் என, நிதியமைச்சர் தியாகராஜன் கூறியுள்ளார்.



## குடும்பத்தினருடன் சந்திப்பு

‘பொன்னியின் செல்வன்’ நாவலை இயக்குநர் மணிரத்னம் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் திரைப்படமாக்கி வருகிறார்.

இதில் விக்ரம், ஜெயம் ரவி, கார்த்தி, அமிதாப்பச்சன், ஐஸ்வர்யாராய், பிரபு, விக்ரம் பிரபு, திரிஷா, ஜெயராம், லால், ஐஸ்வர்யா லட்சுமி ஆகியோர் நடிக்கின்றனர்.

படப்பிடிப்பு தற்போது மீண்டும் புதுச்சேரியில் தொடங்கி உள்ளது. ஐஸ்வர்யா ராய் நடிக்கும் காட்சிகள் இங்கு படமாக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திரைப்படத்தில் சரத்குமார் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். புதுச்சேரியில் படப்பிடிப்பில் இருக்கும் சரத்குமாரை பார்ப்பதற்காக அவரின் மகள்களான வரலட்சுமியும் பூஜாவும் சென்றுள்ளனர். அங்கு ஐஸ்வர்யா ராய், அவரது கணவர் அபிஷேக் பச்சன் மற்றும் மகள் ஆராதியாவை சந்தித்துள்ளனர்.

அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை தனது சமூக வலைத்தள பக்கத்தில் வரலட்சுமி சரத்குமார் பதிவு செய்திருக்கிறார். இந்தர; புகைப்படங்கள் தற்போது வைரலாகி வருகிறன.



நாயகியை மையமாகக் கொண்ட திரைப்படங்களில் நயன்தாரா அதிகமாக நடிக்கிறார். அவரது நடிப்பில் அடுத்து வெளியாகவிருக்கும் நெற்றிக்கண் திரைப்படமும் அவ்வாறான ஒன்று.

அத்துடன் ரஜினியுடன் அவர் நடித்துள்ள அண்ணாத்த திரைப்படம் தீபாவளிக்கு வெளியாகிறது.

இந்தநிலையில், புதிய திரைப்படம் ஒன்றின் படப்பிடிப்பில் நயன்தாரா கலந்து கொண்டுள்ளார். இதனை ஜிஎஸ் விக்னேஷ் என்பவர் இயக்குகிறார்.

இவர் வெங்கட்பிரபுவிடம் உதவி இயக்குனராக இருந்தவர் என்பதுடன், இந்த த்ரில்லர் திரைப்படத்துக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# நயன்தாராவின் புதிய த்ரில்லர்



## நடிகர் விஜய்க்கு ஆளுயர சிலை

தமிழ் திரையுலகில் உச்ச நட்சத்திரமாக வலம் வரும் நடிகர் விஜய்க்கு தமிழ்நாடு மட்டுமல்லாமல் அண்டை மாநிலங்களிலும் ஏராளமான ரசிகர்கள் உள்ளனர்.

இந்த நிலையில், கர்நாடகாவைச் சேர்ந்த விஜய் மக்கள் இயக்க நிர்வாகிகள், நடிகர் விஜய்யின் ஆளுயர சிலை ஒன்றை பரிசளித்துள்ளனர்.

சென்னை, பனையூரில் உள்ள விஜய் மக்கள் இயக்க அலுவலகத்தில் அந்த சிலை வைக்கப்பட்டுள்ளதுடன், அந்தச் சிலையின் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி வருகின்றன.

## ஷாலினி ரீ-என்ட்ரி

குழந்தை நட்சத்திரமாக தமிழ் சினிமாவில் நடித்த ஷாலினி, கடந்த 1997ஆம் ஆண்டு வெளியான காதலுக்கு மரியாதை திரைப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடித்ததன் மூலம் கதாநாயகியாக பிரபலமானார்.

தொடர்ந்து அமர்க்களம், கண்ணுக்குள் நிலவு, அலைபாயுதே, பிரியாத வரவேண்டும் என பல திரைப்படங்களில் நடித்தார்.

அமர்க்களம் திரைப்படத்தில் நடிக்கும் போது நடிகை ஷாலினிக்கும் அஜித்துக்கு இடையே காதல் மலர்ந்தது. அதனைத்தொடர்ந்து 2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி இருவரும் திருமணம் செய்துகொண்டார்கள். இவர்களுக்கு அனோஷ்கா என்ற பெண் குழந்தையும் ஆத்விக் என்ற ஆண் குழந்தையும் உள்ளனர்.

திருமணம் முடிந்த பிறகு நடிகை ஷாலினி படங்களில் நடிக்காத நிலையில் தற்போது 20 வருடங்களுக்கு பிறகு மீண்டும் சினிமாவில் ஷாலினி நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



இயக்குநர் மணிரத்தனம் இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி வரும் பொன்னியின் செல்வன் திரைப்படத்தில் நடிகை ஷாலினி முக்கியமான சிறப்புத் தோற்றத்தில் நடிக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கார் விபத்துக் குறித்து

## யாஷிகாவிடம் வாக்குமூலம்

நடிகை யாஷிகா ஆனந்த், தனது நண்பர்களுடன் காரில் பயணம் செய்த போது மாமல்லபுரம் அருகே உள்ள சூளேரிக்காடு பகுதியில் கார் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் யாஷிகாவின் தோழி வள்ளிச்செட்டி பவணி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

மேலும் படுகாயம் அடைந்த யாஷிகா மற்றும் அவரது இரண்டு ஆண் நண்பர்கள் ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், யாஷிகாவிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர். இந்த வாக்குமூலத்தில் காரை ஓட்டி வந்தது யாஷிகா தான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.



யாஷிகா அதிவேகமாக காரை ஓட்டி வந்த போது திடீரென கார் கட்டுப்பாட்டை இழந்ததால் விபத்துக்குள்ளானதாகவும், அந்த காரில் இருந்த யாஷிகாவின் தோழி பவானி சீட்பெல்ட் அணியாததால் காருக்கு வெளியே தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே மரணமடைந்ததாகவும் அவருடைய வாக்குமூலத்தில் தெரியவந்துள்ளது.

துனீஷியா

# அரசாங்கத்தை கலைத்த ஜனாதிபதி

## நெருக்கடியில் ஜனநாயகம்



துனீஷியாவானது கடந்த பத்தாண்டில், மிகப் பெரிய ஜனநாயக நெருக்கடியை நேற்று (26) எதிர்கொண்டது.

அரசாங்கத்தை ஜனாதிபதி கை சயீட் கலைத்ததுடன், பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளை முடக்கியதை அடுத்தே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த நகர்வை ஆட்சிக் கவிழ்ப்பு என அடையாளப்படுத்தியுள்ள ஜனாதிபதி சயீட்டின் எதிராளிகள், இது வீதியில் எதிர்க்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு அரசமைப்பின்படி பிரதமர் ஹிசெம் மெஷிசியை அகற்றியதுடன், உத்தரவு ஒன்றின்படி பாராளுமன்றத்தை 30 நாள்கள் முடக்கியதுடன், புதிய பிரதமருடன் தான் ஆட்சி செய்வேன் என அறிக்கை ஒன்றில் ஜனாதிபதி சயீட் வெளிப்படுத்தியிருந்தார்.

அரசாங்கத்துக்கும், பாராளுமன்றத்திலுள்ள மிகப் பெரிய கட்சியான இஸ்லாமிய என்னஹ்டா கட்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை அடுத்தே இந்நகர்வு இடம்பெற்றிருந்தது.

கொரோனா எண்ணிக்கை அதிகரிப்பு, அரசியல் பிறழ்ச்சி, பொருளாதார் வீழ்ச்சியாலேயே ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில், ஜனாதிபதி சயீட்டின் அறிவிப்பையடுத்து அவருக்கு ஆதரவாக தலைநகர் துனிஸிலும், ஏனைய நகரங்களிலும் சனத்திரள்கள் கூடியிருந்தன.

இச்சந்தர்ப்பத்தில் இராணுவமானது பாராளுமன்றத்தையும் அரச தொலைக்காட்சியையும் முடக்கியிருந்தது.

இதேவேளை, நேற்று அதிகாலையில் சபாநாயகர் என்னஹ்டா கட்சியின் தலைவரான றஷெட் கன்னௌச்சி பாராளுமன்றத்துக்கு சென்று அமர்வொன்றை அழைப்பேன் எனத் தெரிவித்த நிலையில், அவரை இராணுவம் தடுத்திருந்தது.

நோர்வே

## பிரகாசமான எரிகல்லால் அதிர்ச்சி



தென் கிழக்கு நோர்வேயின் இரவு வானத்தை ஒளியூட்டிய பிரகாசமான எரிகல்லால் அந்நாட்டவர் அதிர்ச்சியடைந்திருந்தனர்.

காணொளியில் நோர்வேயின் மேல் பிரகாசமான ஒளி வெட்டுகள் தென்பட்டதைத் தொடர்ந்து பாரிய சத்தங்கள் நேற்று முன்தினம் (25) கேட்டதாக சம்பவத்தைக் கண்ணுற்றவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், காயங்கள் அல்லது சேதம் ஏற்பட்டதாக எதுவித அறிக்கைகளும் இல்லை எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

அந்தவகையில், தலைநகர் ஒஸ்லோவுக்கு அருகிலுள்ள காட்டில் விண்கல் விழுந்ததாக நம்பும் நிபுணர்கள் அணியொன்று எரிகல்லைத் தேடி வருகின்றது.

ஈரான்

## தண்ணீர் தட்டுப்பாடு; மக்கள் ஆர்ப்பாட்டம்

மோசமான தண்ணீர்த் தட்டுப்பாடு தொடர்பில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளும் மக்களுக்கு எதிராக ஈரானின் தென் மேற்கு குஸெஸ்டான் மாகாணத்திலுள்ள பாதுகாப்புப் படைகள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளன.

இப்பிராந்தியத்தில் வெப்பநிலையானது 50 பாகை செல்சியஸை தொடும் என்ற நிலையிலேயே தண்ணீர்த் தட்டுப்பாடு தற்போது நிலவுகின்றது.

இந்நிலையில், ஆர்ப்பாட்டங்களானது அரசாங்கம் மற்றும் நாட்டின் மீயுயர் தலைவருக்கு எதிரானதாக மாறியுள்ளதுடன், பல்வேறு நகரங்களுக்கும் பரவியுள்ளது.





## இரண்டு மணிநேர மழை; வீதிகள் நீரோடைகளாயின

தென் பெல்ஜிய நகரமான டினான்டில் கடந்த பத்தாண்டுகளில் இல்லாத பாரிய வெள்ளப் பெருக்கை சனிக்கிழமை (24) சந்தித்துள்ளது. இரண்டு மணித்தியாலங்களாக நீடித்த இடியுடன் கூடிய மழையாலேயே வீதிகள் நீரோடைகளாக மாறி கார்கள் அடித்துச் செல்லப்பட்டிருந்தன.

ரஷ்யா

### தேவைப்பட்டால்

## ‘தடுக்க முடியாத தாக்குதலை நடத்துவோம்’

ரஷ்யக் கடற்படையானது எந்தவோர் எதிரியையும் கண்டு பிடிக்கும் என்றும், தடுக்க முடியாத தாக்குதலைத் தேவைப்பட்டால் நடத்தும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் நேற்று முன்தினம் (25) தெரிவித்துள்ளார்.

**“ நீருக்கு மேலான, வான் வழியான எதிரிகளைக் கண்டு பிடித்து, தேவைப்பட்டால் தடுக்க முடியாத தாக்குதல் ஒன்றை அதற்கு எதிராக நடத்துவோம்**

எந்தவொரு நீருக்கடியில், நீருக்கு மேலான, வான் வழியான எதிரியையும் கண்டு பிடிக்கும் திறனைத் தாங்கள் கொண்டிருப்பதாகவும், தேவைப்பட்டால் தடுக்க முடியாத தாக்குதல் ஒன்றை அதற்கு எதிராக நடத்துவோம் என சென். பீற்றர்ஸ் பேர்க்கில் நடைபெற்ற கடற்படை தின அணிவகுப்பில் உரையாற்றும்போதே ஜனாதிபதி புட்டின் கூறியுள்ளார்.



நைஜீரியா

## கடத்தப்பட்ட 28 சிறார்கள் விடுவிப்பு

வட மேற்கு நைஜீரியாவிலுள்ள உயர் பாடசாலை ஒன்றிலிருந்து 121 மாணவர்களை இம்மாத ஆரம்பத்தில் கடத்திய துப்பாக்கிதாரிகள் 28 பதின்ம வயதினரை விடுவித்ததாக பாடசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடுனா மாநிலத்திலுள்ள குறித்த பாடசாலையில் இம்மாதம் ஐந்தாம் திகதி புகுந்த தாக்குதலாளிகள், தங்களது விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்களைக் கடத்தியிருந்தனர். இந்நிலையில், இம்மாணவர்கள் சனிக்கிழமை (24) விடுவிக்கப்பட்டதாக தெரிவித்த குறித்த அதிகாரி இன்னும் 87 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். ஐந்து



மாணவர்கள் கடந்த புதன்கிழமை தப்பித்தாகவும், இரண்டு வாரங்களுக்கு முன்னர் உடல்நிலைக் காரணங்களால் மாணவர் ஒருவரைக் கொள்ளைக்காரர்கள் விடுவித்ததாக இவ்வதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடத்தலையடுத்து குறித்த குழுவானது உணவையும் பணத்தையும் கோரியிருந்த நிலையில், எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என சொல்ல முடியாது என இந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

### முதலாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

# இந்தியாவிடம் வீழ்ந்தது இலங்கை



இந்தியாவுக்கு எதிரான முதலாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் இலங்கை தோற்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியிலேயே 38 ஓட்டங்களால் இலங்கை தோல்வியடைந்திருந்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார். இலங்கை சார்பாக சாமிக கருணாரத்ன, சரித் அஸலங்கவும், இந்தியா சார்பாக பிறித்திவி ஷோவும் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்டனர்.

இந்நிலையில், இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுழற்பந்துவீச்சாளரான வருண் சக்கரவர்த்தி இந்தியா சார்பாக அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்தியா, முதலாவது பந்திலேயே பிறித்திவி ஷோவை துஷ்மந்த சமீரவிடம் இழந்தது. பின்னர் அணித்தலைவர் ஷீகர் தவானும், சஞ்சு சாம்ஸனும் இனிங்ஸை நகர்த்திய நிலையில், 27 (20) ஓட்டங்களுடன் வனிடு ஹஸரங்கவிடம் சாம்ஸன் வீழ்ந்தார்.

இதையடுத்து ஜோடி சேர்ந்த தவானும், சூரியகுமார் யாதவ்வும் வேகமாக ஓட்டங்களை வேகமாகப் பெற்ற நிலையில், 46 (36) ஓட்டங்களுடன் சாமிக கருணாரத்னவிடம் தவான் வீழ்ந்தார். பின்னர் சிறிது நேரத்தில் சூரியகுமார் யாதவ்வும் 50 (34) ஓட்டங்களுடன் ஹஸரங்கவிடம் வீழ்ந்திருந்தார்.

தொடர்ந்து வந்த ஹர்டிக் பாண்டியாவும் 10 (12) ஓட்டங்களுடன் சமீரவிடம் வீழ்ந்த நிலையில், இஷன் கிஷனின் ஆட்டமிழக்காத 20 (14) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களை இந்தியா பெற்றது.

பதிலுக்கு, 165 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு ஆரம்பித்த இலங்கை சிறப்பாக ஆரம்பித்தபோதும், மினோத் பானுகவை 10 (07) ஓட்டங்களுடன் குருனால் பாண்டியாவிடம் பறிகொடுத்தது. தொடர்ந்து வந்த தனஞ்சய டி சில்வாவும் குறிப்பிட்ட நேரத்தில் யுஸ்வேந்திர சஹாலிடம் 9 (10) ஓட்டங்களுடன் வீழ்ந்திருந்தார். உடனேயே அவிஷ்க பெர்ணான்டோவும் 26 (23) ஓட்டங்களுடன் புவ்னேஷ்வர் குமாரிடம் வீழ்ந்திருந்தார்.

பின்னர் வந்த சரித் அஸலங்க இனிங்ஸைக் கொண்டு சென்றபோதும், தடுமாறிய அஷேன் பண்டார 9 (19) ஓட்டங்களுடன் ஹர்டிக் பாண்டியாவிடம் வீழ்ந்திருந்தார். தொடர்ந்து 44 (26) ஓட்டங்களுடன் அஸலங்கவும் தீபக் சஹரிடம் வீழ்ந்ததோடு, அதே ஓவரிலேயே ஹஸரங்கவும் ஓட்டமெதுவும் பெறாமலே திரும்பியிருந்தார்.

இதற்கடுத்த ஓவரில் சாமிக கருணாரத்ன புவ்னேஷ்வர் குமாரிடம் வீழ்ந்ததோடு, அடுத்த ஓவரில் தசுன் ஷானக 16 (14) ஓட்டங்களுடன் வருண் சக்கரவர்த்தியிடம் வீழ்ந்திருந்தார்.

இறுதியாக 19ஆவது ஓவரில் புவ்னேஷ்வர் குமாரிடம் இசுரு உதானவும், சமீரவும் விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து 18.3 ஓவர்களில் 126 ஓட்டங்களையே இலங்கை பெற்றது.

இப்போட்டியின் நாயகனாக புவ்னேஷ்வர் குமார் தெரிவானார். இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியானது, கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் இன்றிரவு எட்டு மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.



## பங்களாதேஷ் தொடரைக் கைப்பற்றியது

சிம்பாப்வேக்கு எதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே 1-2 என தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

சிம்பாப்வே: 20) 5/193 ஓவ. ) (துடுப்பாட்டம்: வெஸ்லே மட்ஹெவெரே 36) 54), றெஜிஸ் சகப்வா 22) 48), றயான் பேர்ள் ஆ.இ 15) 31), தடிவனஷே மருமனி 20) 27), டியோன் மையர்ஸ் 21) 23) ஓட்டங்கள். பந்துவீச்சு: சௌமியா சர்க்கார் 3] 19/2], ஷகிப் அல் ஹஸன் 24/1 4]], ஷொரிஃபுல் இஸ்லாம் 4] 27/1])

பங்களாதேஷ்: 19.2) 5/194 ஓவ. ) (துடுப்பாட்டம்: சௌமியார் சர்க்கார் 49) 68), மகமதுல்லா 34 28)), ஷமிம் ஹொஸைன் ஆ.இ 31 15)), ஷகிப் அல் ஹஸன் 13) 25), அஃபிஃப் ஹொஸைன் 14 (05) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிளெஸிங் முஸர்பனி 2/27 [4], டென்டாய் சட்டாரா 0/27 [4])

போட்டியின் நாயகன்: சௌமியா சர்க்கார்

தொடரின் நாயகன்: சௌமியா சர்க்கார்

### டோக்கியோ 2020:

## வெளியேற்றப்பட்ட தர்மவர்தன

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து இலங்கையின் சாமர தர்மவர்தன வெளியேற்றப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற 73 கிலோ கிராம் எடை ஜூடோ 32 பேருக்கான சுற்றுப் போட்டியிலேயே 0-10 என்ற புள்ளிகள் கணக்கில் ஜிபுத்தியின் ஏய்டன் அலெக்ஸான்ட்ரே ஹுஸெய்னால் தர்மவர்தன வெளியேற்றப்பட்டிருந்தார்.



இதேவேளை, பெண்களுக்கான 400 மீற்றர் பிறீஸ்டைல் நீச்சல் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவின் கேட்டி லெடக்கியை பின்தள்ளி அவுஸ்திரேலியாவின் அரியர்னே டிட்மஸ் வென்றிருந்தார்.

இந்நிலையில், ஆண்களுக்கான 4*100 மீற்றர் நீச்சல் அஞ்சலோட்டப் போட்டியில் ஐக்கிய அமெரிக்கா தங்கம் வென்றிருந்தது. கயெலெப் ட்ரஸல், பிளேக் பைரோனி, பொவே பெக்கர், ஸச் அப்பிள் ஆகியோரைக் கொண்ட அணியே தங்கம் வென்றிருந்தது.

இதேவேளை, பெண்களுக்கான 4*100 மீற்றர் பிறீஸ்டைல் நீச்சல் அஞ்சலோட்டப் போட்டியில் அவுஸ்திரேலிய பெண்கள் அணி தமது உலக சாதனையை தாமே நேற்று முன்தினம் முறியடித்தது.

ப்றொன்டே மற்றும் கேட் கம்பெல் சகோதரிகள், மெக் ஹரிஸ், எம்மா மக்கியோனை உள்ளடக்கிய அணியானது போட்டித் தூரத்தை மூன்று நிமிடங்கள் 29 செக்கன்கள் 69 மில்லி செக்கன்களில் கடந்து உலக சாதனை புரிந்து, இந்நிகழ்வில் அவுஸ்திரேலியாவுக்கு தொடர்ச்சியாக மூன்றாவது தங்கத்தைப் பெற்றுக் கொடுத்திருந்தது. குறித்த மூன்று அணிகளிலும் கேட் கம்பெல் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. பதக்கப் பட்டியலில் இலங்கை நேரப்படி நேற்றுப் பிற்பகல் இரண்டு மணி வரையில், ஏழு தங்கப் பதக்கங்கள், மூன்று வெள்ளிப் பதக்கங்கள், நான்கு வெண்கலப் பதக்கங்களுடன் முதலாமிடத்தில் ஐ. அமெரிக்கா காணப்பட்டிருந்தது. ஆறு தங்கப் பதக்கங்கள், மூன்று வெள்ளிப் பதக்கங்கள், ஆறு வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் சீனா காணப்படுவதுடன், ஆறு தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம், இரண்டு வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் ஜப்பான் காணப்படுகின்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 27 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.